# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 03 திங்கட்கிழமை (16-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:141


## யுத்த நிறுத்தத்தை நீடிக்குமாறு அரசுக்குப் பலதரப்பு அழுத்தம்

கொழும்பு,ஏப்.16

இலங்கையில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்ட இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வு காண்பதற்கு வசதியாக யுத்த நிறுத்தத்தை காலவரையறையின்றி நீடிக்க வேண்டும் என பல தரப்புகளில் இருந்தும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாக யு.பி.ஐ. என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அரசியல் கட்சிகளைச் சார்ந்தோரும் சமாதான விரும்பிகளும் யுத்த நிறுத்தத்தை நீடிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அரசு தனது யுத்த நிறுத்தத்தை குறிப்பிட்ட கால எல்லையுடன் நிறுத்திக்கொள்ளக் கூடாது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் சமாதானப் பேச்சினை ஆரம்பிப்பதற்கு அரசு மேலும் பல முன் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அரசு யுத்தநிறுத்தத்தை நீடிக்காது விட்டால் அது பயனற்றதாகிவிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை நிறுத்திவிட்டு அரசு பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அரசு தற்போது அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் நீடிக்கப்படுவது குறித்த முடிவு தற்போது ஐரோப்பாவில் தங்கியுள்ள ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னரே எடுக்கப்படும் என்று அறிய வருகிறது.

இவ்வாறு அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## யாழ்நகர தேவாலயங்களில்

## நள்ளிரவு ஈஸ்டர் ஆராதனையில் பெருமளவு மக்கள் ஒன்று கூடினர்

யாழ்ப்பாணம்,ஏப்.16

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நேற்று அதிகாலை தேவாலயங்களில் இடம்பெற்ற ஈஸ்டர் ஆராதனைகளில் பெருமளவில் மக்கள் பங்குபற்றினர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை ஒட்டி நேற்றுமுன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று அதிகாலை ஒரு மணிவரையும் யாழ்.பேராலயத்தில் இடம்பெற்ற திருவிழிப்புப் பூசையில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்குபற்றினர்.

யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் திருப்பலி பூசையை ஒப்புக்கொடுத்தார்.

நேற்றுமுன்தினம் இரவு ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்ததால் ஈஸ்டர் ஆராதனைகளில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் பங்குகொண்டனர்.

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களிலும் நள்ளிரவு ஆராதனைகள் இடம்பெற்றன. (ஐ-3)

# யுத்த நிறுத்தத்தை அரசு

# வெசாக் வரை நீடிக்கும்?

## அரசின் நகர்வைப் பொறுத்தே புலிகளின் அடுத்த நடவடிக்கை

கொழும்பு,ஏப்ரல்16

**புத்தாண்டை ஒட்டி அறிவித்துள்ள ஐந்துநாள் யுத்தநிறுத்தத்தை அரசு அடுத்த மாதம் வரும் வெசாக் பண்டிகைத்தினம் (மே 7ஆம் திகதி) வரை நீடிக்க வாய்ப்புள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.**

**யுத்த நிறுத்தத்தை நீடிப்பது தொடர்பாக அரசு எடுக்கவிருக்கும் முடிவைப் பொறுத்தே யுத்தநிறுத்தம் தொடர்பாக புலிகளின் அடுத்தகட்ட நடவடிக்கை அமையும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.**

புத்தாண்டை ஒட்டி அமுல் செய்துள்ள யுத்தநிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என்று பல தரப்புகளில் இருந்தும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் -

இதனையடுத்தே குறிக்கப்பட்ட காலத்துக்கு யுத்தநிறுத்தத்தை நீடிப்பது தொடர்பாக அரச உயர் மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

அடுத்த மாதம் வெசாக் பண்டிகைக் காலம்வரை அரசு யுத்தநிறுத்தத்தை நீடிக்கலாம் என்று ராஜதந்திர வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாக கொழும்புச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இதற்கிடையில் - இருதரப்பினரது யுத்த நிறுத்தத்தையும் நீடிக்கச் செய்வதற்கான முயற்சியாக நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க் ஓரிரு தினங்களில் வன்னிக்குப் புறப்படவிருக்கிறார்.

அங்கு அவர் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தடவை புலிகள் தங்கள் யுத்தநிறுத்தத்தை நீடிப்பார்களா என்பது கேள்விக்குரியதாகி இருப்பதால் அரசின் அடுத்தகட்ட நகர்வு எப்படி அமையப் போகிறது என்ற தீவிர எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் உருவாகியிருக்கிறது.

அரசு அறிவித்துள்ள ஐந்துநாள் யுத்தநிறுத்தம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 6 மணியுடன் முடிவடைய உள்ளது. (ஐ-3-9)

## நாகர்கோயிலில் மோட்டார் தாக்குதல்

கொழும்பு,ஏப்.16

குடாநாட்டில் நாகர்கோயில், முகமாலை ஆகிய பகுதிகளில் படையினரின் முன்னணிப் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்று மோட்டார் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புத்தாண்டை ஒட்டி படையினர் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருவதால் அவர்கள் திருப்பித் தாக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

திருமலை கல்லாறில் படையினரின் பாதுகாப்பு அரண்மீது கடந்த வெள்ளிக்கிழமை புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

வவுனியா செட்டிகுளம் பகுதியில நிலக்கண்ணிவெடியுடன் பொருத்தப்பட்டிருந்த வெடிக்க வைக்கும் சாதனத்தை படையினர் கண்டுபிடித்து மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## ஊடகவியலாளர் அமைப்பு கண்டனம்

கொழும்பு,ஏப்.16

மன்னாரில் தமிழ் ஊடகவியலாளரான ஏ.எஸ்.எம்.பஸ்மி படையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்கும் பிரான்ஸ் ஊடகவியலாளர் அமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்தமாதம் 21ஆம் திகதி முஹம்மது பஸ்மி படையினரால் கைதுசெய்யப்பட்டு மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்த அமைப்பு கடும் கண்டனமும், விசனமும் தெரிவித்துள்ளது.

அரசு அந்த நாட்டின் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பில் உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். படையினரால் பத்திரிகையாளர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் - என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.(ஐ-3-9)

## நாடு முழுவதும் விபத்துக்களில் 915 பேர் காயம்

கொழும்பு,ஏப்.16

புத்தாண்டு தினத்தன்று நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் ஐவர் உயிரிழந்தனர். 915 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்துக்கள் மற்றும் மோதல் சம்பவங்களில் காயமடைந்த 328 பேருக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனங் களைச் செலுத்தியமையே அனேகமான வீதிவிபத்துக்களுக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## தூதர் சொல்ஹெய்முடன் ரணில் நாளை பேச்சு

ஒஸ்லோ,ஏப்.16

நோர்வே சென்றுள்ள எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை செவ்வாய்க்கிழமை நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்முடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

நோர்வே அரசின் அழைப்பின் பேரில் ஒஸ்லோ சென்றுள்ள ரணில் அங்கு அந்நாட்டு அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றார்.

இலங்கை விவகாரத்துக்கென விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள எரிக் சொல்ஹெய்முடன் நாளை நடத்த இருக்கும் பேச்சுக்களின்போது சமாதான முயற்சிகள் தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாட்டை ரணில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் வல்லுறவுகளைக் கண்டித்து

## பல்கலைக்கழக மாணவர்கள் இன்று காலை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்று காலை வகுப்புகளை பகிஷ்கரிக்க உள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த பகிஷ்கரிப்புத் தொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றையும் விடுத்துள்ளது.

தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் அதிகரித்து வருகின்றன. இதற்கெதிராக சகல தரப்பு மக்களும் கிளர்ந்தெழவேண்டும். அதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் தமது முழு ஆதரவையும் வழங்குவர் - என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## 10 கைதிகளின் விடுதலை அரசின் ஏமாற்று வித்தை

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

வவுனியா,ஏப்.16

விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 10 பேரை விடுவிப்பதாக விடுத்த அறிவிப்பு சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்க அரசு மேற்கொண்ட ஏமாற்று வித்தையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் இணையச் செய்திச் சேவையில் புலிகளின் இந்தக் குற்றச்சாட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

புத்தாண்டை ஒட்டிய நல்லெண்ண நடவடிக்கையாக புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 10 பேரை விடுதலை செய்வதாக அரசு கடந்த வாரம் அறிவித்தது தெரிந்ததே.

விடுவிக்கப்படுவதாக 'அறிவிக்கப்பட்டோரில் இருவர் சிங்களவர்கள், இருவர் முஸ்லிம்கள். எஞ்சியோரே தமிழர்கள். அவர்கள்கூட நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்கள் என்று தெரிவித்துள்ள புலிகள், சமாதானத்தில் அக்கறை கொண்டிருப்பதாக காட்டுவதற்கு அரசு மேற்கொண்ட ஏமாற்றுவித்தை இது. இதைக் கைதிகள் பரிமாற்றம் என்றோ, நல்லெண்ண நடவடிக்கை என்றோ ஏற்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

## ஏகாம்பரம் அரைக்கும் ஆலை

அரிசி தீட்டவும், ஊறவைத்த அரிசி, மிளகாய், அரிசி, பயறு, குரக்கன் என்பனவற்றை சிறந்த முறையில் அரைத்துப் பெற்றுக்கொள்ளவும் நம்பிக்கையான ஒரே இடம்:--

**ஏகாம்பரம் அரைக்கும் ஆலை**

(நல்லூர் சந்தை முன்பாக)
கல்வியங்காடு.
(C/16322)


## யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோயில்
## வசந்த உற்சவம்

இன்று (16.04.2001) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று எம்பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தொட்டியில் மங்கள வாத்திய சகிதம் வீதிவலம் வருவார்.

*நாதஸ்வரக் கச்சேரி* : பாலமுருகன் குழுவினர், S.சுப்பிரமணியம் குழுவினர்

மாலை 6.00 மணிக்கு விசேட நிகழ்ச்சியாக **பட்டிமன்றம்** இடம்பெறும்.

*விடயம்:*

**"இன்றைய இளைஞர்களுக்குப் பெரிதும் வழிகாட்டும் இலக்கியம் கம்பனின் இராமாயணமா? வில்லியின் பாரதமா?"**

*பங்குபற்றுவோர்:* S.செந்தூர்ச்செல்வன், S.கருணாகரன், S.ஐங்கரன், R.லெபனான், S.தயாபரன், K.புரந்தரன்

நடுவர்: **திரு.இரா.செல்வவடிவேல்** அவர்கள்

*அனைவரும் வருக!*
*அத்தியடிப் பிள்ளையாரின் அருள் பெறுக!!*

**அத்தியடி இந்து இளைஞர்கள்.**


விளம்பர அனுசரணை:-
*கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசியான நிறுவனம்*
**லலிதா றெக்ஸ்**
(C/16324) இல.5,6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு.நடராசா மதனராசா**

(ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. கட்சியின் பிரதி அமைப்பாளரும்)

அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது சேவையானது மேன்மேலும் தொடர இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
(C/16323) **ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.**

## சீட்டிழுப்பு முடிவுகள்

வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண அபிவிருத்தி இணைப்பாளர்களின் சங்க வளர்ச்சி நிதிக்காக 14.04.2001 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு | :- இலக்கம் 355 |
| இரண்டாம் பரிசு | :- இலக்கம் 805 |
| மூன்றாம் பரிசு | :- இலக்கம் 320 |

**ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:-**

1729, 1551, 451, 1771, 860, 1045, 641, 1520, 1888, 1352

பரிசுக்குரியவர்கள் 66/3, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள மேற்படி சங்க அலுவலகத்தில் (வார விடுமுறைத் தினங்களில்) தமக்குரிய பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

*ஆதரவு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்!*

-தலைவர். - செயலாளர்.
*(வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண அபிவிருத்தி இணைப்பாளர்களின் சங்கம்)*

## சங்கீத சபை செயன்முறைப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வடஇலங்கைச் சங்கீத சபை நடத்தும் சங்கீதம், மிருதங்கம், பரதம் ஆகிய பாடங்களுக்கான தர உயர்வு செயன்முறைப் பரீட்சைகள் குடாநாட்டின் 11 பரீட்சை நிலையங்களில் நேற்று ஆரம்பமாகின.

வடஇலங்கைச் சங்கீத சபையின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் தரங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளே தற்போது ஆரம்பமாகியுள்ளன.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, விக்டோரியாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, நெல்லியடி ம.ம. வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் இந்தப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை இந்த செயன்முறைப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும். (ஜ-7-9)

## மாணவர் பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம்,ஏப்.16

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் மாவட்ட தேசிய பயிற்சிப் பாசறை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பயிற்சிப் பாசறை நிகழ்வுகள் நாளைமறுதினம் புதன்கிழமை வரை நடைபெறவுள்ளன. இதில் 15 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் ஆரம்பமான இந்தப் பயிற்சிப் பாசறையில் துடுப்பாட்டம், கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், பூப்பந்தாட்டம், பாலங்கள் அமைத்தல், சிகரம் அமைத்தல், திசை அறிதல், உடற்பயிற்சிப் போட்டிகள், தலைமைத்துவம், முதலுதவி, வீதி ஒழுங்குகள், கயிறு இழுத்தல் உட்படப் பல விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன. (ஜ-5)


**புலமைப் பரிசில்-2001**
நேற்று பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் இன்றும் தோற்றலாம்.
(பரீட்சைத் தொடர் - 36)
**BOND**
(86683)

**நாகம்ஸ்** சுன்னாகம் (86654)
**விஜய், சிம்ரன், விவேக்** நடித்த
**ப்ரியமானவளே**
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம் (C/16096)
**கார்த்திக், லைலா** மற்றும் பலர் நடிப்பில்
**ரோஜாவனம்**
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)

**லஷ்சுமி** இணுவில் (C/16255)
**பிரசாந்த், சிம்ரன், கரண்** நடிப்பில்
**கண்ணெதிரே தோன்றினாள்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தினரால் 14.04.2001 அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங் களால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மிக மனவருத் தத்துடன் அறியத்தருகின்றோம்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29.04.2001) சீட்டிழுப்பு அதிர்ஷ்டம் பார்க்கப்படும். பரிசு பெற்றவர்களின் விவரம் (02.05.2001) புதன்கிழமை அன்று 'உதயன்' நாளிதழில் பிரசுரமாகும்.

(86685) - நிர்வாகத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 03 - 03 - 1916



மறைவு 17 - 03 - 2001

**திருமதி சின்னத்தம்பி மாணிக்கம்**

திதி:- 16.04.2001

எம் குடும்பத்தின் திருவிளக்கே!
நீ ஏற்றிய ஒளியில்
நாம் வாழ்க்கையைக் கண்டோம்!
களித்தோம்!! பூரித்தோம்!!!
எம் சின்னஞ்சிறிய இதயத்தில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (16.04.2001) திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*82/7, கண்டி வீதி,*
*கண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (C/16325)

கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகர் செல்லாச்சி

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகர் செல்லாச்சி நேற்று (15.04.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் முருகரின் அன்பு மனைவியும், குஞ்சம்மா மனோகரன் (ஆசிரிய ஆலோசகர்), மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும் சுப்பிரமணியம், கமலகுமாரி, பரமேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் சுதர்சினி (ஆசிரியர்), சுகந்தினி (ஆசிரியர்), சுதர்மன், சுதர்சன், சுகதர்சினி, சிவசோதி, கோசலை, குந்தவி, தேவகி, மகிந்தன், மயூரன், நிகிந்தா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.04.2001) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-
*16/12, சீனியர் லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
ந.சுப்பிரமணியம் (மருமகன்)
(86687)

### கார்த்திகேசு பாலசுந்தரம்

புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பாலசுந்தரம் கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் விமலாதேவியின் அன்புக் கணவரும் ஜானா(புதுக்குடியிருப்பு), சுனீதா(சுவிஸ்), நிரஜா, பாலசுவர்ணா, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - லெட்சுமி ஆகியோரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (வட்டக்கச்சி) மற்றும் கனகசுந்தரம் (லண்டன்), சந்திரன் (ஜேர்மனி), சிவயோகசுந்தரம் (ஜேர்மனி), காந்தன் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயரெத்தினம், பாக்கியலெட்சுமி, தெய்வேந்திரநாதன், Dr.பேரின்பநாதன், அன்னலெட்சுமி, குணரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2001) திங்கட்கிழமை கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உதய நாகபூசணி அம்மன் கோயிலடி,*
*26/14, ரயில் பாதை,*
*நீராவியடி.* (86674)

தகவல்:
அ.குணரெத்தினம்.

உதயன்

## அமிலச் சோதனை

நாவற்குழி, தச்சன்தோப்புப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் சொத்துக்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வட பிராந்திய இராணுவத் தளபதிக்கும், வடபிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கும் யாழ்பாண நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

நாட்டில் - அதன் எந்தப் பிரதேசத்திலும் சரி - சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு காவல்துறைக்கே - பொலீஸ் பகுதிக்கே - பிரதானமாக உண்டு.

சட்டத்தை அமுல் செய்யும் பொறுப்புடைய பொலீஸ் பகுதி , அதனைச் செய்யத் தவறின் அது குறித்துக் கவனம் எடுத்து அறிவுறுத்தும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உண்டு.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பொலீஸ் நிலையங்கள் இல்லை. அவ்வாறு சட்டத்தின் காவலர்கள் இல்லாத இடங்களில் அந்தப் பொறுப்பு இராணுவத்தையே சென்றடைகிறது. ஏனெனில் இராணுவம் நிலைகொள்ளாதிருக்கும் மக்கள் குடியிருக்கும் பகுதி எதுவும் யாழ்.மாவட்டத்தில் இல்லை என்பதால்!

ஆகையால் யாழ்.மாவட்டத்தின் இராணுவத்தின் உயர் அதிகாரிக்கும், பொலீஸ் உயர் அதிகாரிக்கும் யாழ்ப்பாண நீதிவான் இ.த.விக்னராஜா விடுத்த உத்தரவு காலத்தின் தேவை ஆகும்.

நாவற்குழி, தச்சன்தோப்புப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சார்பில் தொடரப்பட்ட மனுத் தொடர்பாகவே - குறிப்பிட்ட ஒரு மனுத் தொடர்பாகவே - நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது ஆயினும், அந்த உத்தரவு குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருத்திப் பார்க்கக் கூடிய - பொதுவாக எடுத்துக் கொள்ளக்கூடிய - ஒன்றாகும்.

போர் காரணமாக சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த எந்த மக்களினது உடைமைகளிற்கும சொத்துக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்பது இன்று நேற்று உண்டான சாபக்கேடு அல்ல. மக்கள் தமது சொந்த வீடுகளை விட்டு வெளியேறியதும் அவர்கள் விட்டுச் செல்லும் உடைமைகளுக்குப் பாதுகாப்பு எதுவும் இல்லாமல் போய் விடுகிறது. அவை பிறர் கை போய்ச் சேர்வதனைத் தடுப்பதற்கு எவரும் இலர்.

இந்தச் சந்தப்பத்தைப் பயன்படுத்தி பிறர் சொத்தை மனக் கூச்சம் இன்றி சூறையாடும் ஊனர்க் கோஷ்டியினர் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். தமது வீடுகளைப் பார்க்கச் செல்வதாக் கூறி பிறர் சொத்துக்களையும் இறாஞ்சிக் கொண்டு வரும் எத்தர்கள் கூட்டம் நம்மத்தியில் பெருகி வருவது பெரும் வெட்கக்கேடாகும்.

தன்னைப் போலவே பிறரும் நொந்து போயுள்ளதை சிறிதும் மனிதாபிமானத்தோடு சிந்திக்காமல், செயற்படும் இவர்கள் பஞ்சமா பாதகர்கள்; தண்டிக்கப்படவேண்டியவர்கள்.

பல பகுதிகளில் பல சந்தர்ப்பங்களில் பிறர் பொருளைச் சூறையாடும் கொடியவர்கள் திட்டமிட்ட முறையில் பாதுகாப்பற்ற உடைமைகளை அபகரிக்கிறார்கள். வேலியே பயிரை மேய்வது போல, இவர்களுக்குப் படையினரும் துணை போவதாகப் பொதுவான குற்றச் சாட்டுக்கள் உண்டு.

அது ஒருபுறமிருக்க, குடாநாட்டின் பல பகுதிகளிலும் பெருகி வரும் திருட்டுக்களைக் குறைக்க முடியாமல் இருப்பதற்கு, சந்தேகநபர்கள் இனங் காணப்பட்டாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதில் பொலீஸ் பகுதி வேண்டிய தீவிரம் காட்டுவதில்லை என்ற குற்றச் சாட்டும் பொதுமக்கள் பக்கத்திலிருந்து உண்டு.

இத்தகைய ஒரு பின்னணியில் யாழ்ப்பாண நீதிவானின் உத்தரவு ஓர் 'அமிலச் சோதனை' போன்று அமையும். யாழ்.மாவட்டம் முழுவதிலும் பாதிக்கப்படும் மக்களின் நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவும் இருக்கும்.

# அரசின் யுத்தநிறுத்த அறிவிப்பை வரவேற்கின்றார் சந்திரசேகரன்

கொழும்பு,ஏப்.16

புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கம் விடுத்துள்ள யுத்தநிறுத்த அறிவிப்பை வரவேற்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசு தற்போது யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டிருப்பதை மலையக மக்கள் முன்னணி வரவேற்கின்றது.

இந்த முடிவு யுத்த பூமியில் அமைதியையும், மக்கள் மத்தியில் தற்காலிக நிம்மதியையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு நல்லதொரு முன்மாதிரியை மேற்கொண்டுள்ளார்கள். இதனை சர்வதேச சமூகத்தினரும் அமைதியில் அக்கறை கொண்டோரும் வரவேற்றுப் பாராட்டி உள்ளார்கள்.

அரசுத் தரப்பில் யுத்தம் என்பது அசாத்தியமான ஒன்று என்பது கடந்த சில நாள்களில் பொய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் எதிர்கால நலனில் அரசு அக்கறையோடு செயற்பட்டால் தற்போதைய யுத்த நிறுத்தத்தை நிரந்தரமாக்கமுடியும் புலிகள் தங்களது நம்பகத்தன்மையை எல்லாத் தரப்பினரிடமும் கடந்த மாதங்களில் தொடர்ச்சியாக உறுதிப்படுத்தி வந்துள்ளார்கள். இப்போது அமைதிப் பேச்சுவார்த்தைக்கான அடையாளம் அரசிடம் இருந்தே எதிர்பார்க்கப்படுகின்றது.

இனிமேலும் 'யுத்தநிறுத்தம் சாத்தியமற்றது' என்பதனை அரசு நியாயப்படுத்த முற்பட்டால் 'இலங்கை அரசு' வேஷம் போடுவதாகவே உலகம் கணிப்பிடும் எனவே அரசு இந்நேரத்தில் நேர்மையோடும் துணிச்சலோடும் செயற்படவேண்டும் என்றும் மலையக மக்கள் முன்னணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது. (க-7)

## வடமராட்சியிலும் சஞ்சிகை தீக்கிரை

நெல்லியடி,ஏப்.16

கொழும்பிலிருந்து வெளியாகும் அரசசார்பு நிறுவனத்தின் தமிழ் மாத சஞ்சிகை ஒன்றின் பிரதிகள் கடந்த வெள்ளியன்று மாலை, வடமராட்சிப் பகுதியிலும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் அந்த சஞ்சிகை வெளியிடப்பட்டிருந்ததாலேயே, அவை தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது

இந்தச் சஞ்சிகையின் பிரதிகள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தீக்கிரையாக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

(க-109)

# ஆரம்பக் கல்விச் செயலமர்வுகள்

தென்மராட்சி,ஏப்.16

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளில் 5ஆம் தரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சி 17ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 18ஆம் திகதி புதன்கிழமை இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

19ஆம் திகதி வியாழக்கிழமையும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட இருபது ஆசிரியர்களுக்கான களிமண் கடதாசிக் கூழ் ஆக்க வேலைக்கான செயலமர்வு நடைபெறும். மேற்படி பொருத்தமான ஆசிரியர்களை செயலமர்வுகளில் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை -

மே மாதம் 12ஆம்,13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தரம் 1,2,3 ஆசிரியர்களுக்கான நாடகக் களப் பயிற்சிக்கும் 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தரம் 4,5 நாடகக் களப் பயிற்சிக்கும் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெற உள்ள கடதாசி மடிப்புக் கலையாக்கச் செயலமர்வுக்கும் பொருத்தமான ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (க)

## சாரணருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்ட சாரணர்களுக்கு, அணித்தலைவர்களுக்கான பயிற்சி நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்துகொள்ளும் சாரணர்களைச் சீருடையுடன் நாளை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் கூடுமாறு இலங்கை சாரணர் சங்க உதவி மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார்.

(க-5)

# காரைநகர் கைலாயக்குளத்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

காரைநகர்,ஏப்.16

காரைநகர் மேற்கில் உள்ள கைலாயக் குளத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கு 'கெயர்' நிறுவனம் நிதி உதவி வழங்கி உள்ளது.

இந்தக் குளத்தைப் புனரமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் பங்களிப்புடன் நடைபெறவுள்ள இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா நிதியை 'கெயர்' நிறுவனம் ஒதுக்கி உள்ளது.(க-73)

## அனுமதி வழங்கப்படாததால்

# வன்னிக்கு ஏப்ரல் மாதத்திற்குரிய உணவுப்பொருள்கள் சென்றடையவில்லை

வவுனியா,ஏப்.16

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டு பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான ஏப்ரல் மாத உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தினால் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

வன்னியில் ஏற்கனவே உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், ஏப்ரல் மாத உணவுப் பொருள்களும் அனுப்பி வைக்கப்படாமையினால் வன்னி மக்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அங்கு எரிபொருள்களுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க-5)

### நாளை

சித்திரை 04
செவ்வாய்க்கிழமை
திதி. நவமி
பிற்பகல் : 1:54 வரை
நட்சத்திரம் திருவோணம்
பிற்பகல் : 5.20 வரை
சுபநேரம் : 10.34 - 12.04
ராகுகாலம் : 3.04 - 4.34
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நமது உள்ளம் நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல் அமைதியுடன் இருக்கவேண்டும்.

# கல்விச் சாலைக் காட்சிகள்



காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், பாடசாலை அதிபர் ஆ.பாலகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர் தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (க-73)



கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலையில் தரம் ஒன்றுக்கான செயற்பாட்டு அறை திறப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி மாலினிதேவி வேதநாதன் தலைமையில் நடைபெற்றது. யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி கலா பிரகதீஸ்வர சர்மா நாடாவை வெட்டி செயற்பாட்டு அறையைத் திறந்து வைப்பதையும், அருகில் சிறப்பு விருந்தினர் திருமதி பே.பாலேந்திரா, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ.தவராசலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (க-135)



நெடுந்தீவு மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அதிபர் திருமதி பி.எம்.ஜே.அன்ரனி மற்றும் அதிபர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ், சிறப்பு விருந்தினரான கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரட்ணம் பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம், பங்குத்தந்தை வண.மொன்பேட் அடிகளார், சமூக சேவையாளர் எஸ்.எட்வேட் உட்பட பலர் நிகழ்ச்சியை அவதானித்துக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம். (க-7)



சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற புதிய விஞ்ஞான கூட திறப்பு விழாவின் போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் ச.கைலாசநாதனுடன் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (க-29)



இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் வடமாகாணக் கிளையினரால் அண்மையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் முகாமைத்துவக் கல்வி, வர்த்தகப் பீடாதிபதி எம்.நடராஜ சுந்தரம் "பயனளிக்கும் முகாமைத்துவம்" (Effective Management) என்ற பொருளில் உரையாற்றுவதையும் அங்கு சமுகமளித்தவர்களின் ஒரு பகுதியினரையும் காணலாம்.(க)

# அரசு யுத்தநிறுத்தத்தை நீடிக்காவிடில் பயங்கர யுத்தம் வெடிக்கும் அபாயம்

## மட்டு - திருமலை ஆயர் சுவாம்பிள்ளை எச்சரிக்கை

அரசாங்கத்தின் புத்தாண்டு கால யுத்தநிறுத்த அறிவிப்பு மூலம் ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலை தொடர அதனை மேலும் நீடிக்க வேண்டும். அவ்வாறு நீடிக்காவிட்டால் பயங்கர யுத்தம் ஒன்று வெடிக்கலாம் என்று மட்டக்களப்பு - திருமலை ஆயர் அதிவண. கிங்ஸிலி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஆயர் நேற்று முன்தினம் வீடத்துது அறிக்கை ஒன்றிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆயரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் ஒரு தலைபட்ச யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சுமுகமான நிலை, அரசின் யுத்தநிறுத்த அறிவித்தலுடன் வலுப்பெற்றுள்ளது. இந்தச் சூழ்நிலை தொடர வேண்டுமாயின் யுத்தநிறுத்தத்தை அரசு நீடிக்க வேண்டும்.

அரசு யுத்தநிறுத்தத்தை நீடிக்காது விட்டால் பெரும் யுத்தம் வெடிக்கும் அபாய நிலையே காணப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக அவ்வாற யுத்தம் வெடிக்குமாயின் தற்சமயம் உள்ள சுமுகமான நிலை மீண்டும் ஏற்பட நீண்ட காலம் செல்லும். எனவே இதைஉணர்ந்து அரச செயற்பட வேண்டும் - என்றார். (க-3-21)

## மோட்டார் சைக்கிளுக்கு விடுவதற்கு

# பெற்றோலை பலாத்காரமாகப் பறித்த இயக்கப்பாணி இளைஞர்!

யாழ்ப்பாணம்,ஏப்16

யாழ்ப்பாணம் டேவிட் வீதியிலுள்ள எரிபொருள் வியாபாரி ஒருவரிடம் இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோலை மிரட்டிப் பறித்தெடுத்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகலில் மேற்படி வீதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த அவர் அங்கு எரிபொருள் வியாபாரம் செய்துகொண்டிருந்தவரிடம் 2 போத்தல் பெற்றோல் தருமாறு கேட்டாராம்.

பணமில்லாமல் பெற்றோல் வழங்க முடியாது என வியாபாரி கூறியபோது அவரைத் தகாத வார்த்தைகளினால் பேசி மிரட்டிவிட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தவற்றில் 2 போத்தல் பெற்றோலை தூக்கிச் சென்று தனது மோட்டார் சைக்கிளுக்கு விட்டுச் சென்றுள்ளார்.

இதே நபர் அன்று மாலை பஸ்ரியன் சந்திக்கு அண்மையில் வைத்து தேநீர் கடைகளுக்கு வடை சுட்டு விற்கும் இளைஞர் ஒருவரிடமிருந்து சைக்கிளைத் தருமாறு மிரட்டியதாகவும் அறியவந்தது.

இந்த இளைஞரின் நடவடிக்கை தொடர்பாக அப்பகுதி மக்கள் தற்பொழுது எச்சரிகையுடன் செயற்பட்டு வருகின்றனர். இந்த இளைஞர் இரண்டு சம்பவங்களின்போதும் இயக்கங்களின் பாணியில் மிரட்டியதாகச் சொல்லப்படுகிறது. (க-5)

# போரை நிறுத்தி அபிவிருத்திக்கு நிதியைச் செலவிட நடவடிக்கை

## அமைச்சர் ரத்வத்தை கூறுகிறார்

கொழும்பு,ஏப்.16

நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்தி, அதற்காக செலவிடப்படும் பெரும் தொகையான நிதியை தேசிய அபிவிருத்திக்கு பயன்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

காலி - வந்துறுவ கிராமத்தில் மின்சார விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தேவையான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது.

எதிர்வரும் 2004ஆம் ஆண்டளவில் நாட்டின் சகல குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சமயம் நாட்டில் 44 சதவீதமான குடும்பங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது 62 சதவீதமான குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது. மிகவிரைவில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டின் அபிவிருத்தியை முன் எடுத்துச் செல்ல எமது அரசு தயாராகி வருகின்றது எனவும் அவர்தெரிவித்தார். (க-6)

## கிராம அலுவலரின் அலுவலகம் சேதம்

தென்மராட்சி,ஏப்.16

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள துன்னாலை கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் புகுந்த இருவர் அங்கிருந்த உடைமைகள், கதவு, யன்னல் ஆகியவற்றை சேதப்படுத்திய சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இச் சம்பவம் தொடர்பாக அல்வாயைச் சேர்ந்த முத்துலிங்கம் சந்திரகுமார் (வயது 25), துன்னாலை தெற்கைச் சேர்ந்த ஜெயம் பாஸ்கரன் ஆகியோரை நெல்லியடிப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இப் பிரிவில் அமைக்கப்படவுள்ள சமாதான சபையில் அங்கத்துவம் கிடைக்காததை அடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக் கூறப்படுகிறது. (க-117)


# 31 ஆம் நாள் பிரிவுத் துயர் பகிர்தல்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் அதிபர்
திரு.த.முத்துக்குமாரசாமி
அவர்களின் அருமை அன்னையார்
திருமதி த.முத்துப்பிள்ளை
அவர்கள்

முத்தையன்கட்டில் 17-03-2001 இல் அமரரானதையிட்டு இன்றைய 31 ஆம் நாளில் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
(86655) யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும்
உபஅதிபரும், இந்நாள் பகுதி நேர விரிவுரையாளருமாகிய
கனகசபை குககுமாரராஜா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்,
துணை ஆளணியினர்கள்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
(86673)



# UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for civil Engineering works or from Multi Purpose CO-Operative Socities for the Addition/ Improvements at Dept. of Dance, Ramanathan Academy of Fine Arts, Maruthanamadam.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 25.04.2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit Rs.2000/-
2. Non-refundable deposit Rs. 500/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 03.05.2001 at 10.00 a.m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance branch of this University during office hours if necessary.

Registrar,
University of Jaffna.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.

(C/16303)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1979 - 03 - 03



உதிர்வு 2000 - 04 - 27

கரணவாய் மேற்கைச் சேர்ந்த
செல்வன் அ.லோகநாதன்
(யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவன்
கலைப்பிரிவு - 1999)
திதி: அபரபக்கநவமி 2001-04-16

அகாலமாய் நீ மறைந்து ஆண்டொன்று ஆனதய்யா! தந்தை மேற்கொண்ட பாசம் மறந்தனையோ? கண்மணி போல் காத்த தாயை மறந்தனையோ? உன்னை நல்ல ஆசானாக்க வேண்டுமென்ற அண்ணர்மாரின் ஆசை பகற்கனவானதோ? ஆசைக் கதைகள் சொல்லி அக்காவை மகிழ்விக்கும் அன்பு கொண்ட நீ ஒரு நொடிப் பொழுதேனும் சிந்திக்காமல் சென்ற மாயம்தான் என்னே? பாசமுடன் வளர்த்த தங்கையை மறந்ததேனோ? கொஞ்சும் மொழி பேசும் மருமக்களை மறந்தனையோ? கட்டுண்டு வாழ்வோம் என்ற அத்தானின் நினைவு பொய்யானதோ! பிற்கால வாழ்வைக் கவனிப் பாய் என்ற பெரியப்பாவினதும், மாமியினதும் மனங்களை மறந்த தேனோ? ஒரு கணமேனும் தங்காது சென்று சிநேகிதருடன் பகிடிக் கதைகள் சொல்லிச் சிரிக்க வைப்பதை மறந்தனையோ? ஊர்மக்கள் கலங்க நெஞ்சுதனில் கொண்ட வைரத்தால் போன மாயம்தான் என்னே? கூற்றுவன் தானும் ஒரு கணப்பொழுதேனும் தாமதியாது கூட்டிச் சென்றானே! ஆண்டொன்று சென்றாலும் உம் நினைவுகள் எங்களின் நெஞ்சங்களை விட்டகலாது!

*உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

*16ஆம் கட்டை,*
*கரணவாய் மேற்கு, கரவெட்டி.*

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

(86642)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1959 - 03 - 24



அமலன் அடியில் 2001 - 03 - 16

அமரர்
இம்மனுவேல் பிலிப் தம்பிராஜா

பண்பிலே தெய்வமாய்
பாசத்தின் திருவுருவாய்
குணத்திலே குழந்தையாய்
வாழ்ந்த தெய்வமே! - உம்
பச்சிளம் பாலகன் 'அப்பா!'
என்று பாசமாய் அழைக்கத் துடிக்க
பரிதவிக்கும் உம் துணைவி ஆதரவின்றித் தவிக்க
உடன் பிறந்தோர் தந்தையுமே துயரத்திலே
ஆழ்ந்திருக்க
எம் உயிரே எம்மை விட்டுக் கணப்பொழுதில்
மறைந்ததேனோ?

இவரின் ஆன்மா சாந்தியுற இன்று (16-04-2001) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந் நிகழ்விலே அனைவரும் கலந்து கொண்டு அதன் பின் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்னாரின் ஆன்மா இறைவனில் இன்புறப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தென்மூலை,*
*அச்சுவேலி*
(86646)

- அன்பு மனைவி, மகன்,
தந்தை, சகோதரர்.

# தமிழக அரசியலில்...

தமிழ் மக்களுக்கு தூய்மையான திறமையான நிர்வகத்தை அளிப்பதாகவும், புனிதமான நடு நிலையான நீதித்துறை, கண்ணியமான வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை வழங்குவதாக அ. தி. மு. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜெயலலிதா வாக்குறுதி வழங்கியுள்ளார்.

★ ★ ★

தி. மு க. சார்பில் 14 பெண் வேட்பாளர்களும், அ. தி. மு. க சார்பில் 22 பெண் வேட்பாளர்களும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

★ ★ ★

நடைபெற உள்ள தமிழக சட்டசபைத் தேர்தலில், ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய இரு தொகுதிகளிலும் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா போட்டியிட உள்ளார்.

அ. தி. மு. க. நிறுவநர் எம். ஜி. ஆர். இறப்பதற்கு முன் உடல் நலக் குறைவால் அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற போது நடந்த தேர்தலில், ஆண்டிப்பட்டித் தொகுதிக்குச் செல்லாமலேயே, அங்கு போட்டியிட்டு வென்றது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

இளையான் குடித் தொகுதியில் போட்டியிட அனுமதிக்காததால் தி.மு. கவிலிருந்து அ தி. மு. கவுக்கு கட்சி தாவிய தமிழ்குடிமகனின் பெயர் அ, தி மு. கவின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவில்லை.

★ ★ ★

திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் எதிர்வரும் தேர்தலில் அ தி மு. க. கூட்டணிக்கு ஆதரவு வழங்குவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக திராவிடர் கழகத்தலைவர் கி. வீரமணி அறிவித்துள்ளார்.

★ ★ ★

தமிழக தேர்தலில் தி மு. கவின் சார்பில் சென்னை சேப்பாக்கத்தில் கருணாநிதி, துறைமுகத்தில் பேராசிரியர் அன்பழகன், ஆயிரம் விளக்கில் மு. க. ஸ்டாலின் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திரைப்பட நடிகர் நெப்போலியன் வில்லிவாக்கத்திலும்இயக்குநர் ரி.ராஜேந்தர் பூங்கா நகர்த் தொகுதியிலும் தி. மு. க. வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

★ ★ ★

இந்தியாவில் தமிழகம் உட்பட 5 மாநிலங்களில் நடைபெற உள்ள தேர்தலுக்கான அதிகார பூர்வ அறிவிப்பு இன்று வெளியாகிறது.

இந்தத் தேர்தல்களின் போது சுமார் 13 கோடியே 40 லட்சம் வாக்காளர்கள் 824 சட்ட மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க உள்ளார்கள்.

திருச்சி உட்பட 3 நாடாளுமன்றத் தொகுதிகளின் இடைத் தேர்தல்களும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

த. மா. கா விலிருந்த முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்தின் மக்கள் ஜனநாயகப் பேரவை சென்னையில் புரசை வாக்கத்திலும் தஞ்சாவூரின் காட்டு மன்னார் கோவிலிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

# தி.மு.க. - ம.தி.மு.க. பிளவுக்கு கருணாநிதியே காரணம்

## வை. கோபால்சாமி குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 16

தி மு.க. கூட்டணியிலிருந்து தமது கட்சி வெளியேறியதுக்கு முதல்வர் கருணாநிதியின் குடும்ப அரசியலே காரணம் என்று ம. தி. மு.க பொதுச்செயலாளர் வை. கோபால்சாமி குற்றச்சாட்டி உள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கருணாநிதியின் எதிர்கால ரகசியத் திட்டங்களுக்கு ம.தி. மு.க. இடையூறாக இருந்ததால் கூட்டணியில் இருந்து வெளியேறத்தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் —

1993 ஆம் ஆண்டு தான் தி மு கவை விட்டு விலக்கப்பட்ட அதே காரணமே தற்போது தி.மு க. கூட்டணியிலிருந்து தனது கட்சி வெளியேறவும் காரணமாக அமைந்துள்ளதாகவும் வை. கோபால்சாமி குறிப்பிட்டார்.



தி மு கவில் கருணாநிதியின் மகன் மு க. ஸ்டாலினின் செல்வாக்கை அதிகரிக்க அப்போது தொண்டர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த தன்னை கட்சியை விட்டு பொய்க் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி வெளியேற்றியதாக வை. கோபாலசாமி 1993 ஆம் ஆண்டில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ம. தி. மு. க. வினை தி. மு. கவுக்குஇழக்க கருணாநிதி முயற்சி செய்து வந்ததாகக் கூறிய வை. கோபால்சாமி இவ்வாறு முதுகில் உதைக்கும் கால்களுக்கு எவ்வாறு முத்தமிட முடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.

பாரதிய ஜனதாவுக்கு தமிழகத்தில் 23 இடங்கள் ஒதுக்கப்பட்டதாலேயே கூட்டணியில் இருந்து ம. தி. மு. க. வெளியேறியதாகக் கூறப்படுவது தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில் — சில செய்தி ஊடகங்களின் உதவியுடன் பரப்பப்பட்ட விஷமப் பிரசாரம் அதுவென்று வை. கோபால்சாமி கூறினார்.

பல தடைகளைத் தாண்டி வளர்ந்த ம. தி. மு. கவை மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் —

தேர்தல் முடிவுகள் தமது பலத்தைக் காட்டும் என்றும் வை. கோபால்சாமி பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ 5)

## மாறனின் முடிவை மாற்ற முயற்சி

சென்னை, ஏப். 16

தீவிர அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் முடிவை மாற்றும் முயற்சியில் மற்றொரு மத்திய தி. மு க. அமைச்சரான டி. ஆர். பாலு ஈடுபட்டுள்ளார்.

தி. மு. கவின் இரண்டாம் மட்டத் தலைவர்களுக்கு கருணாநிதி அளிக்கும் முக்கியத்துவத்தால், கட்சிக்குள் கோஷ்டி மோதல்கள் அதிகரித்துள்ளதால் விசனமடைந்தாலேயே முரசொலிமாறன் இத்தகைய முடிவை எடுத்ததாகக் கூறப்படுகிறது.

## சோனியா மீது குற்றச்சாட்டு

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரான சோனியா காந்தி மீது ஜனதாதளத் தலைவர் சுப்பிரமணிய சுவாமி சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடத்திவருகிறது.

# அமெரிக்க உளவு விமானத்தை ஒப்படைக்க சீன அரசு மறுப்பு

## இழுபறி நிலை தொடர்கிறது

பெய்ஜிங், ஏப். 16

விபத்துக்குள்ளாகி சீனாவில் தரையிறக்கப்பட்ட அமெரிக்கஉளவு விமானத்தை மீண்டும் அமெரிக்காவிடம் ஒப்படைப்பதை சீனா தாமதப்படுத்தியுள்ளது.

விமான விபத்துக் குறித்துத் தாம் நடத்தி வரும் விசாரணைகள் முடிவடையாததால், அமெரிக்க உளவு விமானத்தை ஒப்படைப்பது குறித்து முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

தமது விமானத்தினை உடனடியாகத் தம்மிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று அமெரிக்கா கோரியதற்கு சீனா இவ்வாறு பதிலளித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சரகப் பேச்சாளர் ஒருவர் கூறுகையில், இவ்விபத்துக் குறித்த விசாரணைகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்புத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். விசாரணையின் முடிவைப் பொறுத்தே அமெரிக்க உளவு விமானத்தை அமெரிக்காவிடம் ஒப்படைப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விபத்துக்கு சீனாவைக் குற்றஞ்சாட்டி உள்ள அமெரிக்கா, சர்வதேச வான்பரப்பில் சீனா மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களை, தாம் முன்பே கண்டித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால் இரு தரப்பினரிடையேயான முறுகல்நிலை மேலும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் சீனப்போர் விமானத்துடன் மோதி விபத்துக்குள்ளான அமெரிக்க உளவு விமானம் சீனாவின் கைலான் தீவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டதும் —

11 நாள் இழுபறிக்குப் பின்னர் உளவு விமானத்தில் இருந்த 24 பணியாளர்களை சீனா விடுவித்ததும் தெரிந்தவையே.

அமெரிக்க உளவு விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள, அதி உயர் தொழில்நுட்பக் கருவிகளைப் பற்றி சீனா தெரிந்து கொண்டு விடும் சாத்தியம் இருப்பதால் அதனைத் தடுக்கவே உளவு விமானத்தை மீளப்பெறுவதில் அமெரிக்கா அவசரம் காட்டி வருவதாகக் கருதப்படுகிறது. (ஒ-5)

## கனடியத் துறைமுகத்தில்

## கப்பல் கொள்கலனுக்குள் இருந்து பயணித்த 30 பேர் கைது!

வான்கூவர், ஏப். 16

கப்பலில் கொண்டு செல்லப்பட்ட கொள்கலனுக்குள் மறைந்திருந்த 30 சட்ட விரோதக் குடியேற்றவாசிகளைக் கனடிய அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் ஆசிய நாட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

கப்பல் கப்டன் கனடிய அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலையடுத்து வான்கூவர் துறைமுகத்தில் சம்பந்தப்பட்ட கப்பல் சோதனையிடப்பட்டதாகவும்—

அப்போது கொள்கலன்களில் மறைந்திருந்த சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் கண்டு பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைதானவர்கள் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்காகவே தாம் கப்பலில் மறைந்து பயணித்ததாக விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர். (ஒ-5)

## இந்தியாவில் உயிர் நுட்ப மாநாடு

பெங்களூர், ஏப். 16

இந்தியாவின் முதலாவது உயிர் நுட்ப மாநாடு இன்று கர்நாடக மாநிலம் பெங்களூரில் தொடங்குகிறது.

மூன்று நாள்களுக்கு நடைபெறும் இந்த மாநாட்டில் சுமார் 40 பல்தேசிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட 600 பேர் கலந்து கொள்கின்றனர். (ஒ-4)

## தலையால் ஒட்டிப் பிறந்து

## வெட்டிப் பிரித்த குழந்தைகள் ஆரோக்கியமாக உள்ளனர்

சிங்கப்பூர்சிற்றி, ஏப். 16

தலைகள் ஒட்டியபடி பிறந்து, பின்னர் சத்திர சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட இரட்டைக் குழந்தைகளான கங்காவும், யமுனாவும் ஆரோகியமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பொழுது அவர்கள் இருவரும் தனித்தனியே தொட்டில்களில் உறங்குவதாகவும்.

சத்திர சிகிச்சையால் ஏற்படும் வலிகளில் இருந்து குழந்தைகள் இருவரும் விடுபட்டு வருவதாகவும் மருத்துவர்கள் மேலும் கூறினார்கள்.

கங்கா என்ற குழந்தைக்கே மண்டையோட்டில் அதிக பிளாஸ்ரிக் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் சிகிச்சையின் பின்னர் சுய நினைவை அந்தக் குழந்தையே முதலில் அடைந்தது.

மருத்துவர்கள் அழைக்கும் போதும் குழந்தைகளின் முகங்கள் உணர்வலைகளை பிரதிபலிக்கின்றன. இதன் மூலம் பிரித்த பின்னரும், அவற்றின் மூளைகள் ஆரோக்கியமாக இருப்பது புலனாகிறது

சத்திரசிகிச்சையின் போது கங்காவுக்கு தொடையிலிருந்தும், யமுனாவுக்கு முதுகுப் பகுதியிலிருந்தும், தோல் எடுக்கப்பட்டு மண்டையோட்டுப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தைச் சேர்ந்த இந்த இரட்டைக் குழந்தைகள் இரண்டும் வளர்ச்சியடையும் போதும் மேலும் சில சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படலாம் என்ற காரணத்தால், இவர்கள் தொடர்ந்து சிங்கப்பூரிலேயே 3 மாத காலத்துக்கு தங்க வைக்கப்பட உள்ளனர்.

(ஒ-5)

உலக அரங்கில்

## செய்தி வெளியிட சுதந்திரம் கோரிய

## தனியார் தொலைக்காட்சியை ரஷ்ய அரசு தன்வசப்படுத்தியது

மொஸ்கோ, ஏப். 16

ரஷ்யாவில் செய்தி வெளியிடுவதற்கு பூரண சுதந்திரம் கோரி வந்த தனியார் தொலைக் காட்சி நிறுவனம் ஒன்றின் நிர்வாகத்தை ரஷ்ய அரசுதன்வசப்படுத்தியுள்ளது

என் ரி.வி. எனப்படும் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் சுதந்திரமாக செய்திகளை வெளியிட்டு வந்தது. இந்தச் செய்திகளில் சிலவற்றால் அதிபர் விளாடிமிர் புடினுக்கும் அரசுக்கும் சில பாதிப்புகள் ஏற்பட்டன.

இந்த நிலையில், கடந்த சனிக்கிழமை, என். ரி. வி. நிறுவனத்தை ரஷ்ய அரச நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் கைபற்றினர்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அதிபர் புடினின் ஆதரவு இருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-5)

## ஏற்றுமதித்தடை தளர்த்தப்பட்டது

ஈராக்குக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு விதித்திருந்த தடைகளை எகிப்து தளர்த்திக் கொண்டது.

இரு நாடுகளும் கடந்தஜனவரி மாதம் செய்துகொண்ட தாராள வர்த்தக ஒப்பந்தத்தின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு பயிலுநர் நியமனம் கிடைக்கும்

தென்மராட்சி, ஏப். 16

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களில் தகுதியானோர் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

1999 ஆம் ஆண்டு முதல் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களே இவ்வாறு நியமனம்செய்யப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ளது. இது குறித்து சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாகச் சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களினதும் சுயவிவரங்கள் மற்றும் கல்வித் தகைமைகள் பற்றிய விவரங்களும் பாடசாலை அதிபரின் சிபாரிசுகளுடன் வலயக் கல்விப் பணிமனைகளில் சேகரிக்கப்படும். இது பின்னர் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை —

தென்மராட்சி, தீவகம் ஆகிய வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் இதுதொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் வலயக் கல்வி அலுவலகங்களுக்குச் சமுகமளிக்குமாறு கோரியுள்ளனர்.

தென்மராட்சி வலய ஆசிரியர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமையும் தீவக வலய ஆசிரியர்கள் இன்று திங்கட்கிழமையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-7-117)

## சேவை நலன் பாராட்டு விழா

நெல்லியடி, ஏப். 16

கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை அதிபராக சுமார் பதினொரு வருடகாலம் பணியாற்றி ஓய்வு பெறும் செ. தங்கராஜாவின் சேவை நலன் பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ—109)


## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

வரைவுள்ளது

## பதவி வெற்றிடம்

**கிளை முகாமையாளர்:-**

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 'பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு 30-04-2001 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

**தகைமைகள்:-**

1) கல்வித்தகைமைகள் கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தராதரப் பத்திரம்/ க. பொ த. சாதாரண தரா தரப் பத்திரம், எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/தூயகணிதம், தமிழ்ப்பாசை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தி.

அல்லது

2) கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**வயது:-** 25 — 50

**சம்பளம்:-** நாளொன்றிற்கு ரூபா 125

**பிணை:-** சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட காசுப்பிணை, உறுதிப்பிணை செலுத்தப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.

12-04-2001 (சி/16324)


## எல்லே போட்டி

வலிவடக்கு, ஏப். 16

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளிடையே நடத்தப்பட்டு வரும் ஆண்கள், பெண்களுக்கான எல்லே சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 13 பிரதேச செயலாளர் பிரிவு அணிகளும் பெண்கள் பிரிவில் 11 பிரதேச செயலாளர் பிரிவு அணிகளும் பங்கு பற்றவுள்ளன.

(ஐ-86)

## கைதடிப் பகுதி ஆலயங்களில் பூஜைகள் ஆரம்பம்

தென்மராட்சி, ஏப். 16

கைதடிப் பகுதியில் கடந்த பதினொரு மாதங்களாக மூடப்பட்டிருந்த இந்து ஆலயங்களில் தற்போது பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கைதடி தெருவோரப் பிள்ளையார் கோயிலில் புதுவருட தின பூஜையுடன் தினமும் பூஜைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈ பி. டிபியின் தென்மராட்சி அமைப்பாளர் ரூ. அலெக்ஸாண்டரின் (சான்ஸ்) முயற்சியினால் கைதடிப் பாலத்திற்கு அருகில் உள்ள இந்த ஆலயத்தில் புத்தாண்டு தினப் பூஜைகள் ஆரம்பமானதாக ஆலயப் பூசகர் தெரிவித்தார்.

இதேவேளை கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி கோயிலில் கடந்த புதன்கிழமை தொடக்கம் பூஜைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஏப். 16

நல்லூர் பிரதேச சபையினால் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையேயான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி (ஓவர் கேம்) இன்று திங்கட்கிழமை பிற்பகல்3 00மணிக்கு திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு —

★ தலையாளி இந்திரா சனசமூக நிலையம் எதிர் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம்.

★ முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலைய ''ஏ'' அணி எதிர் கொக்குவில் நேதாஜி சனசமூக நிலைய அணி.

(க-86)


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06 — 10 — 1946

உதிர்வு 16 — 04 — 1997

### அமரர் கனகன் தங்கராசா

(இ. போ. ச. நடத்துநர் - பருத்தித்துறை)

ஆண்டுகள் நான்கு சென்றதே - உங்கள்
அன்பு முகம் காணாது
நெஞ்ச மலர் வாடுதே - உங்கள்
நேச மொழி கேளாது
காலங்கள்தான் போனாலும் - உங்கள்
பாசமது மறையாது!
நீங்கள் எமைப் பிரிந்தாலும் - உங்கள்
நினைவலைகள் எம் நெஞ்சை விட்டகலாது!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மாமன், மாமி.

வல்லை வீதி,
தொண்டமனாறு.

(86670)


# மன்னாரில் தேங்கிக்கிடந்த பருவகாலச் சீட்டுகள் வந்தன

கடந்த 2 மாதங்களுக்கு மேலாக மன்னாரில் தேங்கிக் கிடந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். மாவட்டத்துக்குரிய பருவகாலச் சீட்டுப் பொதிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் மூலம் அண்மையில் எடுத்துவரப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட இந்தப் பருவகாலச் சீட்டுகள் அங்கிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்காக அங்கு வைக்கப்பட்டிருந்தன.

மன்னாரில் தேங்கிக் கிடந்த இந்தப் பொதிகளை அண்மையில் கொழும்பு சென்ற வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் திருகோணமலை ஊடாக அவற்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஆறு மாதங்களுக்குத் தேவையான இந்தப் பருவ காலச் சீட்டுகள் அரசாங்கப் பாதுகாப்பு அட்டையில் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)


## மரண அறிவித்தல்கள்

### கறுப்பையா மகேசகுமார்

(தவில்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கறுப்பையா மகேசகுமார் கடந்த (14 - 04 - 2001) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கறுப்பையா மற்றும் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் கன்னியாவின் அன்புக்கணவரும், மதனின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (16—04—2001) திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
காந்தி
(மைத்துனர்)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (86681)

### நறுசீசியஸ் செல்லத்துரை கிறிஸ்ரியன் புஸ்பராசா

இல. 20, அடப்பன் வீதி, குருநகரைச் சேர்ந்த நறுசீசியஸ் செல்லத்துரை கிறிஸ்ரியன் புஸ்பராசா (P W D) கடந்த (13.04.2001) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் கனடாவில் வசிக்கும் ஆரோக்கியத்தின் (பச்சைக்கிளி) (இளைப்பாறிய ஆசிரியை, யா/சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்) அன்புக் கணவரும், நிலானி, சந்திரன், ருத்திரா, அனுரா, பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ( 17.04.2001 ) செவ்வாய்க்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவரது ஆன்ம இளைப்பாறுதலுக்காக எதிர்வரும் (19.04 2001) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு குருநகர் புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலி முடிவுற்றதும் வீட்டுக்கு வருமாறு அழைக்கின்றோம்.

தகவல்:
ஜெகநாதன் பபா,
(மைத்துனி)

இல. 20, அடப்பன் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (86680)

### நன்னித்தம்பி கிருஷ்ணமூர்த்தி (இந்து)

(முன்னாள் சாரதி, யா/இ. போ. ச; தற்போதைய சாரதி, மன்னார் இ. போ. ச.)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது மன்னாரில் வசித்தவரான நன்னித்தம்பி கிருஷ்ணமூர்த்தி கடந்த (13-04-2001) வெள்ளிக்கிழமை மன்னாரில் அகால மரணமானார்.

அன்னார் திரு திருமதி நன்னித்தம்பியின் (கனடா) அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தவனத்தினதும், திருமதி சின்னாச்சிப் பிள்ளையினதும் அன்பு மருமகனும், சத்தியவதியின் அன்புக் கணவரும், சுஜந்தினி, சுஜாகரன், டிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேஸ்வரி (திருகோணமலை), செல்வராணி தேவதாஸ், விநாயகமூர்த்தி (கனடா), காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரமூர்த்தி, சிவமூர்த்தி மற்றும் கிருபாகரன் (கனடா), கிருபானி (கனடா) ஆகியோரின் சகோதரரும், சண்முகநாதன், சர்வேஸ்வரன், தேவராஜா, நாகேஸ்வரி, குமுதினி, கங்காதேவி, ஆறுமுகசாமி (அன/மல். ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15-04-2001) ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் உள்ள இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மைத்துனர்கள்:
திரு. கா. சர்வேஸ்வரன்
பெரிய மதவடி, சுன்னாகம்,
திரு. க. ஆறுமுகசாமி
வீரபத்திரர் கோயிலடி,
மல்லாகம்.

(86679)

# தற்போது அவசியமாகத் தேவைப்படும் பிறப்புச் சான்றிதழைப் பெறுவது எப்படி?

## வழிமுறைகளை விவரிக்கிறார் பதிவாளர்

**பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்ள மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந் தக் கட்டுரை அமைந்துள்ளது. காலங்கடந்த பதிவுகள் தொடர் பான விவரங்களும் கட்டுரை யில் இடம்பெற்றுள்ளன.**

தற்போது யாழ்ப்பாணத்தில் பிறப்புச் சான்றிதழின் தேவை இன்றி யமையாததாகவுள்ளது. குழந்தை முதல் மிகமிக வயது முதிர்ந்தோர் வரை பல தேவைகளின் பொருட்டும் பிறப்புச் சான்றிதழின் பிரதி வேண்டி அலைகிறார்கள். பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளமுடியாதபோது தவ றான வழிகளில் இட்டுச் செல்லப் பட்டு மோசடியான கள்ளச் சான்றி தழ்களைப் பெறுவதுடன் பணம் விரயம் செய்து வீண் தொல்லைகளி லும் மாட்டிக்கொள்கிறார்கள்.

ஒவ்வொருவராலும் சமர்ப்பிக்கப் படும் சான்றிதழ்களில் சந்தேகம் வரும்போது சம்பந்தப்பட்ட திணைக் களங்களும், வெளிநாட்டுத் தூதரகங் களும் அவற்றை உரிய அதிகாரி களுக்கு அனுப்பி சரிபார்த்த பின்பே ஏற்றுக்கொள்ளும் என்பதை மக்கள் கவனத்திற் கொள்ளுதல் நன்று.

பிறப்புச் சான்றிதழின் தேவையைச் சரியான வழியில் நிறைவு செய்யும் நோக்குடன் இங்கு சில வழிகாட்டற் குறிப்புகளை பொதுமக்கள் நலன் கருதி வெளியிட விரும்புகிறேன்.

### பிறப்புப் பதிவு

பிறப்பு ஒன்று எந்த இடத்தில் நிகழ்கின்றதோ அந்த இடத்திலேயே பதிவு செய்யப்பட வேண்டும். இதுவே சட்டமுமாகும். எந்த ஒரு பிறப்பும் உரிய பெற்றோரினால் வழங்கப்படும் தகவலின் மீதே பதியப்படும். பெற் றோர் தகவல் வழங்காதவிடத்து பதியப்படமாட்டாது. பிறப்பொன்று பதி யப்பட்டவுடன் இலவசப் பிரதி யொன்று பெற்றோருக்கு வழங்கப் படும். பிறப்பொன்று நிகழ்ந்து மூன்று மாதத்துள் பதிவு செய்யப்பட வேண் டும்.

### பிரதி பெறுதல்

பிறப்புச் சான்றிதழின் பிரதியொன் றைப் பெறவிரும்பும் ஒவ்வொரு வரும் பிள்ளையின் பெயர், தகப்ப னின் முழுப்பெயர், தாயின் முழுப் பெயர் (கன்னிப் பெயர்), பிறந்த இடம், பிறந்த திகதி ஆகியவற்றைக் குறிப்பிட்டு தயாரிக்கும் விண்ணப்பம் ஒன்றை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ, பிறப்பு எந்த மாவட்டத்தில் நடந்ததோ அந்த

## தவறான வழிகளில் சான்றிதழ்களை பெற்று வீண் தொல்லைகளில் சிக்காதீர்!

மாவட்டத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு (தென்னிலங்கை யைப் பொறுத்தவரையில் சம்பந்தப் பட்ட பிரதேச செயலகங்களுக்கு) இரத்துச் செய்யப்படாத உரிய முத் திரையை ஒட்டி சமர்ப்பிக்கலாம். உரிய படிவத்தில்தான் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லை. பதிவு இலக்கமும் பதிவுத் திகதியும் தெரியுமாயின் பிரதியொன் றுக்கு 5/=முத்திரையும், பதிவு இலக் கமும் பதிவுத் திகதியும் தெரியாத விடத்து 10/= முத்திரையும் ஒட்டு தல் வேண்டும். அத்துடன் சுய விலாசமிடப்பட்ட அஞ்சல் உறையும் இணைத்தல் வேண்டும்.

பதிவு இலக்கம் என்பது பதிவின் இலக்கம் ஆகும். இது ஏற்கனவே வழங்கப்பட்ட சான்றிதழில் காணப் படும் விண்ணப்ப இலக்கமாகவோ, படிவத்தின் தொடர் இலக்கமாகவோ இருக்காது.

பதிவு இலக்கம் எப்போதும் 01 முதல் 10000 வரையான இலக்கங்க ளுக்கிடையேயான இலக்கமொன்றா கவே இருக்கும். இவ்விலக்கத்தின் முன் எழுத்துக்கள் எதுவும் இருக் காது. பதிவுத் திகதி ஒரு பக்கச் சான்றிதழாயின் 08ஆம் கூட்டிலும், இரு பக்கச் சான்றிதழாயின் 11ஆம் கூட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். பிறந்த திகதியும் பதிவுத்திகதியும் ஒன்றல்ல என்பதை கவனித்தல் வேண்டும்.

பொதுமக்களால் பிரதி வேண்டி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தைப் பெற்ற மேலதிக மாவட்டப் பதி வாளர் அவ்விண்ணப்பத்தில் தரப் பட்ட விவரங்களின் அடிப்படையி லேயே தேடுதலை மேற்கொண்டு பதிலை அனுப்பிவைப்பார். விண் ணப்பத்தில் பிள்ளை பிறந்த இடம் எது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த இடத்தை அடிப்படையாக வைத்தே தேடுதல் மேற்கொள்ளப் படும். ஆதலால் சரியான பிறந்த இடத்தை குறிப்பிடுதல் மிக அவசி யமானதாகும்.

பிறந்த இடத்தை யாழ்ப்பாணம் என பொதுவாகக் குறிப்பிடாது யாழ். போதனா வைத்தியசாலை, தர்ம லிங்கம் பிரசவ விடுதி, கந்தர்மடம் வீட்டில், முதலாம்குறுக்குத் தெரு வீட்டில், பலகாடு காரைநகர் வீட்டில் என விளக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும். அடுத்து பிறந்த திக தியை சரியாகக் குறிப்பிடுதல் வேண் டும்.

பிறப்பு பதிவு, பிறப்பு நிகழ்ந்து மூன்று மாதத்திற்கு பிந்தியதாயின் தேடுதலைப் பதிவு செய்யப்பட்ட காலத்தில் மேற்கொள்வதற்கு வசதி யாக வேண்டிய விவரங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். அடுத்து முக்கியமானது தாயின் சரியான கன்னிப் பெயராகும். பிறப்புப் பதி வின் சுட்டுக்கள் தாயின் பெயரை அடிப்படையாக வைத்தே தயாரிக் கப்படுவதால் இது அவசியமாகின் றது.

மேலே குறிப்பிட்ட மூன்று விட யங்களில் ஒரு விடயத்தில் தவறு நேர்ந்தாலும் பிறப்பு பதிவு செய்யப் படவில்லை என்ற தவறான முடி வொன்றிற்கு வரும் சந்தர்ப்பம் உரு வாகும்.

### சரியான விவரங்கள் தரப்பட வேண்டும்

பிறப்பு பதியப்படவில்லை என்ற பதில் கிடைப்பின் உடனடியாக பிறப்பு பதியப்படவில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுதல் சரியன்று. மேலே குறிப்பிட்ட மூன்று விவரங்க ளையும் சரியாகக் கொடுத்தோமா என மீள் பரிசீலனை செய்வதுடன், முன்னர் இவ்வாறு பிரதி பெற்றுள் ளோமா, அவை எங்கு சமர்ப்பிக்கப் பட்டன என்ற விவரங்களை அறிந்து சரியான விவரங்களைத் திரட்ட முயற்சிக்க வேண்டும். அதன் அடிப் படையில் மீளவும் சரியான விவரங் களை கொடுக்க முயற்சித்தல் வேண்டும்.

அலுவலகத்தில் ஏற்படும் தவறு ஒன்றும் உண்டு. ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வதால் ஒரு சிலருக்கு ஏற்படும் களைப்பு, அசட் டுத் தைரியம்,அசமந்தப் போக்கு, ஒன்றையே திரும்பத் திரும்பப் பார்ப் பதால் ஏற்படும் கண் மாயை காரண மாக தேடிக்கொண்டு போகும் போது பதிவுப் பக்கங்களைத் தவறவிடும் சந்தர்ப்பமும் மிக அரிதாக நிகழ்வ துண்டு.

**ந.சதாசிவ ஐயர்**
**மேலதிக பதிவாளர் நாயகம்**

ஆதலின் கொடுத்த விவரங்கள் யாவும் சரியானவை அல்லது முன்பு பிரதி எடுத்துள்ளேன் எனத் தற் துணிவு கொள்பவர் மீண்டும் ஒரு முறை விண்ணப்பித்துப் பார்த்தல் வேண்டும் என்பதையும் இங்கு தயவு டன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பதிவு பழுதடைந்துவிட்டது எனும் கடிதம் கிடைக்கப் பெறுவோர் அக்கடிதத்தின் பிரதி ஒன்றுடன் புதிதாக விண்ணப்பம் ஒன்றினை *மேலதிக மாவட்டப் பதிவாளர், முன் னரங்க அலுவலகம்,61/1/1 ஸ்ரீசங்க ராஜ மாவத்தை, கொழும்பு-10* எனும் விலாசத்திற்கு அனுப்பி பிரதி யொன்றைப் பெற முயற்சிக்கலாம். இவ்வலுவலகம் நேர்வே அரசு ஆத ரவில் இன விவகார அமைச்சினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும்.

பிறப்பு பதியப்படவில்லை எனும் முடிவுக்கு வருவோர் இளம் வயதின ராயின் காலம் கடந்த பிறப்பு பதி வின் மூலம் பதிவினை மேற்கொள்ள ஆவன செய்யவேண்டும். வயோதி பர்களால் காலம் கடந்த பிறப்புப் பதிதல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாததால் அவர்கள் தமது அடையாள அட்டை பெறு தல், வெளிநாடு செல்ல கடவுச் சீட் டுப் பெறல், ஓய்வூதியம், வங்கியில் பணம் பெறல், காப்புறுதி மற்றும் தேவைகளுக்குப் பதிவில்லை அல் லது பதிவு பழுதடைந்துவிட்டது என பதிவாளர் திணைக்களத்தி னால் வழங்கப்படும் கடிதத்துடன் தமது விவாகச் சான்று, பிள்ளை களின் பிறப்புச் சான்றிதழ்கள், வாக் காளர் இடாப்பு போன்ற ஆவணங் களை ஒன்றிணைத்து சத்தியக் கட தாசி மூலம் தேவைப்படும் விடயங் களை சம்பந்தப்பட்ட திணைக்களம் திருப்தியுறும் வண்ணம் உறுதிப் படுத்தல் வேண்டும்.

இது தவிர போலிச் சான்று களைப் பெற்று சமர்ப்பிக்க முயற் சிக்கலாகாது. பிறப்புச் சான்று இல்லை என்ற ஒரே காரணத்திற்காக எந்த ஒரு திணைக்களமும் எடுத்த எடுப்பில் உடனடியாக தமது சேவையை வழங்காது; ஒருவரின் விண்ணப்பத்தை நிராகரிக்காது. பிறப்புச் சான்று இல்லாதவிடத்து அதற்கு மாற்றீடாக வேறு ஆவணங் களைப் பெற்று எப்படி இவ்விண்ணப் பத்தின் தேவையை உறுதிப்படுத்த லாம் என்பதில் அவை அக்கறை உள்ளவையாய் இருக்கும் என்பதை யும் பொதுமக்கள் மறந்து விடக் கூடாது.

### பிறப்புச் சான்றிதழ்களை ஏற்றலும் பரிசீலித்தலும்

ஒவ்வொரு நிறுவனமும் ஒருவ ரின் தேவையொன்றை நிறைவு செய் யும் பொருட்டு அவரின் பிறப்புச் சான்றிதழினைக் கோரும்போது பின் வரும் சான்றுகளை சமர்ப்பிக்கலாம் என பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.26/95இல் காட்டப்பட்டுள்ளது.

(1) பதிவாளர் திணைக்களத் தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்று இது பதிவாளரால் வழங்கப்பட்ட இலவசப் பிரதி, உறுதிப்படுத்தப் பட்ட பிரதி அல்லது மேலதிக மாவட் டப் பதிவாளரால் அல்லது உதவிப் பதிவாளர் நாயகத்தால் உறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளில் ஒன்றாக இருக்கும்.

பதிவாளர் ஒருவரால் வழங்கப் பட்ட பிரதி, மேலதிக மாவட்டப் பதி வாளரால் உறுதிப்படுத்தப்பட வேண் டும் என்றோ, மேலொப்பம் இடப்பட வேண்டும் என்றோ சட்டத்தில் எங் கும் சொல்லப்படவில்லை.

(2) சான்றிதழ் ஒன்றைப் பெறுப வர் தமக்கு அதன்மீது திருப்தியற்ற நிலை தோன்றின், அதனைச் சம்பந் தப்பட்ட மேலதிக மாவட்டப் பதி

(8ஆம் பக்கம் பார்க்க)

# குழந்தைகள் வடிவில் இறைவனைக் காணுங்கள் வாழ்க்கையின் விழுதுகளே அவர்கள்தான்

**பிரசாந்தியில் நடந்த உல கக் கல்வியாளர் மாநாட்டில் (25.08.2000) மனித குலத்துக் குச் செய்யவேண்டிய சேவைப் பணிகளையும், மனித உயர் குணநலன்களின் மேம்பாட்டின் அவசியத்தையும் வலியுறுத்தி பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா வழங்கிய அருளுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.**

**இந்தக் கட்டுரையின் முதல் இரு பகுதிகள் ஏற்கனவே வெளி யாகியிருந்தன. இறுதிப்பகுதி இன்று வெளிடப்படுகின்றது.**

### செல்வம்

ஒருவன் செல்வந்தனாக இருக்க லாம். ஆனால் அவன் நல்ல குண மற்றவனாக இருந்தால் அவனது செல வம் முழுதும் வீண். இறந்த பின்பு அவனால் ஒரு கைப்பிடி மண்ணை யாவது கொண்டு செல்ல முடியுமா? முடியாது. வங்கிக் கணக்கில் இருக் கும் பணம் அவனைப் பின் தொட ராது. ஆகவே ஒழுக்கமும், நற்குண மும் மிக முக்கியமானவை.

### கல்வி

★ "எழுதப் படிக்கத் தெரிந்த வரை யெல்லாம் கல்வி கற்றவராகக் கருதமுடியுமா?

★ பட்டங்கள் பெறுவதனால் மட் டுமே, ஒருவனைக் கல்வி கற்றவனா கக் கூற முடியுமா?

★ நற்குணங்களை வளர்க்காத கல்வியைக் கல்வி எனக் கருத முடி யுமா?

★ கல்வி என்பது உயிர் வாழ என் றால், பறவைகளும் மிருகங்களும் உயிர்வாழ்வதை நாம் காணவில் லையா?"

கல்வியின் இலக்கு தூய்மையை வளர்ப்பது. உலகியல் கல்வி நிரந் தரமல்ல. ஆத்மாவைப் பற்றிய அறிவே என்றும் நிரந்தரம். அதனைப் பக்தி யின் மூலமும், இறைவன் மேல் வைத்த அன்பின் மூலமும்தான் பெற முடியும்.

மனிதன் பிறந்திருப்பதே இவ்வுல கம் முழுவதற்கும் ஓர் எடுத்துக்காட் டான வாழ்க்கை வாழ்வதற்குத்தான்.

ஒரு முட்டாள் தான் தனது உயர்ந்த படிப்பையும், புத்திசாலித் தனத்தையும் பற்றிப் பெருமையடித் துக் கொள்கிறான். அவனைப் பற்றியே அவனுக்குத் தெரியாது என்பதனை அவன் புரிந்து கொள்வதில்லை. இத் தனை கல்வி கற்றும் அவனது தீய குணங்களை அவன் கைவிடாவிடில் என்ன பயன்?

உலகியல் படிப்புகள் அனைத் தும் வீணான வாதப் பிரதிவாதங்க ளுக்கு அவனை இழுத்துச் செல் லுமே தவிர, முழுமையான ஞானம் அடைய வழிவகுக்காது. அமரத்து வத்திற்கு அவனது கல்வி அவனை இட்டுச் செல்லாது. ஆகவே நிரந்தர மான அமரத்துவம் தரும் அறிவைப் பெறவே மனிதன் முயற்சி எடுக்க வேண்டும்.

**தொகுப்பு: கரன்**

அதுதான் உண்மைக் கல்வி. அது நீ எங்கிருந்தாலும் உன்னைப் பாதுகாக்கும். அத்தகைய கல்வியை நீ அடையும் போது அனைவரும் உமது நண்பர்கள் ஆகிவிடுவார்கள்.

### மகிழ்ச்சி

பஜனை முடிவில் *'லோகாஸ் ஸமஸ்தா ஸுகினோ பவந்து'* (உல கம் முழுவதுமே சுகமாக இருக் கட்டும்) எனப் பிரார்த்தனை செய்கி றீர்கள். சிலர் மகிழ்ச்சியாயிருந்து சிலர் அவ்வாறில்லாமல் இருத்தல் கூடாது. எல்லோருமே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அது எப்போது இயலும்? அனைவருமே மனித உயர் குணநலன்களை நடைமுறைப்படுத் தும் போதுதான் அது முடியும். அவற்றை நடைமுறைப்படுத்துபவனே உண்மையான மனிதன்.

பெரியவர்கள் சிறியவர்களுடைய இளம் இதயங்களில் மனித உயர் குணநலன்கள் என்ற விதைகளை விதைக்க வேண்டும். அவர்கள் பிற் காலத்தில் பெரிய ஆலமரமாக வளர்ந்து நிறையப் பேருக்கு அடைக கலம் தருவார்கள். எனவே பெற்றோ ரும், ஆசிரியரும் கடினமாக முயன்று,



இத்தகைய குணநலன்கள் குழந்தை களின் மனதில் ஊன்றி முளைத் தெழப் பாடுபட வேண்டும். "உன்னு டைய நடப்பைப் பற்றிச் சொல்; நீ எப்படிப்பட்டவனென்று நான் சொல் கிறேன்" எனக் கூறப்படுவதுண்டு. ஆகவே தீயவர் சேர்க்கையிலிருந்து விலகி ஓடுங்கள்; நல்லவர் நட்பை நாடுங்கள்; ஒவ்வொரு நாளும் நற் செயல்களில் ஈடுபடுங்கள்; உனது நல்ல நடத்தையைப் பார்த்து தீயவ னும் கூட மனம் மாறுவான்.

ஒரு கல்வி நிறுவனத்தைத் துவக்குவது மட்டும் போதாது; மாண வர்கள் நல்ல முறையில் வளர்க்கப் படவேண்டும்; நல்வழியில் செலுத் தப்பட வேண்டும்.

குழந்தைகள் மேல் எப்போதும் கோபத்தைக் காட்டாதீர்கள். அவர்க ளிடம் இனிமையாகவும், மிருதுவா கவும் பேசுங்கள். ஆசிரியர்களுக்கி டையேயும் கூட நடைமுறைகள் எல் லாம் இனிமையாக இருக்க வேண் டும். அப்போது தான் குழந்தைகள் இந்த உதாரணங்களைப் பார்த்து மேலும் ஊக்கமடைவர்.

### முன்னுதாரணம்

கணிதம், பௌதிகம், இரசாய னம் இவற்றையெல்லாம் புத்தகங்க ளிலும், பரிசோதனைக் கூடங்களி லும் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் மனித உயர் குணநலன்கள் அவ்வா றல்ல. அவற்றை வெறும் வாய் வார்த்தையாக ஆசிரியர் கற்பிக்க முடியாது. இது உடற்பயிற்சி போன் றது. ஆசிரியர் மனித உயர் குண நலன் தொண்டவராக செயற்படின் மாணவர்களும் அவ்வாறு செயற்படு வார்கள்.

குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்து அதுபோலவே நடந்து கொள கிறார்கள். ஆகையால் நீங்கள் குழந் தைகளுக்கு சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை போன்றவற்றை உங்கள் நடைமுறை மூலம்தான் கற்பிக்க முடியுமே தவிர வெறும் வார்த்தை களாலோ உபதேசங்களாலோ அல்ல.

இவற்றைக் கற்பிப்பதன் மூலமே குழந்தைகள் நல்ல முறையில் முன் னேற முடியும். இந்தத் தேசம் முழுவ தும் வளரும். இந்தத் தேசம் மட்டு மல்ல, உலகில் இருக்கும் அத்தனை நாடுகளும் நல்ல முறையில் மாறும். இன்று சிலர் போதிக்கின்றனர்; அவர் களில் சிலர் அவற்றை நிரூபிக்கின் றனர்; மிகக் கொஞ்சப் பேர் மட்டுமே நடைமுறைப்படுத்துகின்றனர். அத னால்தான் இன்று உலகம் இந்த அளவுக்கு மோசமானதாக இருக் கிறது.

### மதிப்பு

நீங்கள் செல்வந்தர்களாக இருக் கலாம்; சிலர் நன்கு படித்தவர்களாக இருக்கலாம். உங்களிடம் இருக்கும் இத்தகைய செல்வங்களை வைத்து நீங்கள் மதிப்பிடப்பட மாட்டீர்கள்.

உங்கள் செல்வத்தை எந்த அள வுக்கு நல்ல முறையில் செலவு செய கிறீர்கள்? உங்கள் கல்வியை எந்த அளவுக்கு நல்ல முறையில் பயன் படுத்துகிறீர்கள்? உங்கள் புத்தியை சமுதாயத்தின் நன்மைக்காக எந்த அளவு செலவிடுகிறீர்கள்? இவை யெல்லாம்தான் பகவானால் கணக் கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோல் பிஷ்(Gold fish) மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஐ.அருளானந்தம்(குட்டி), **40/17 (16/16),** சீனியர் லேன், யாழ்ப்பாணம். (பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள ஒழுங்கையில் கடைசிவீடு) (86631)

நல்ல நிலையில் உள்ள டீ பிறீஷர் **(D FREEZAR)** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கண்ணா, 381, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86605)

சகல விதமான பூங்கன்றுகள், கனி மரங்கள், பூஞ்சாடிகள் (மொத்தமாகவும், சில்லறையாகவும்) பெற்றுக் கொள்ளலாம். நாய்க்குட்டிகளும விற்பனைக்குண்டு. தொடர்பு: வீ.கே. மனோகரன் (ஆசிரியர்) வாகையடி, இமையாணன், உடுப்பிட்டி. (86625)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை, பச்சை, நீலம்) விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (86507)

## T.V. விற்பனைக்கு

12" கறுப்பு வெள்ளை A/C, D/C, 20" கலர் (NATIONAL) விற்பனைக்கு உண்டு. N.T. ராஜன், 140, K.K.S. வீதி, சத்திரத்துச் சந்தி, யாழ்ப்பாணம். (86545)

## இலக்கியக் கட்டுரைகள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள், 1. இலக்கியக்கட்டுரைகள் - விமர்சன நூல், 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? - நாடகநூல், 3. நாடகம் எழுதுவது எப்படி? 4. யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுப்பு, 5. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள் படித்துப் பாருங்கள். (86678)

## வியாழமாற்றம்

எங்கும் விற்பனையாகின்றன. சனீஸ்வர வக்கிர நிவர்த்தி பலாபலன்கள் வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி? ராகு கேது யார் யாருக்கு யோகத்தை அள்ளித்தரும்? ஒரே புத்தகத்தில் எல்லா ராசிகளுக்கும் பலன் பார்க்க வேலணை சோதிடர் V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். (86658)

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARM** புறொயிலர் இறைச்சிக்கோழி, **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P:** 2868 (86653)

## தவறிவிட்டது

பொன்னையா சேனாதிராசா என்பவரின் (மீசாலை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு) விசேட அ.அட்டை (இல.091048039), 24-03-2001 அன்று பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அரசடி வீதி, கிராம சேவையாளர் திருபரமசிவத்திடம் அல்லது றூபா வர்த்தக நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (86672)

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைச சேர்ந்த நவரத்தினராஜா ஷோபனா என்பவருடைய தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை, சிறு தொகைப் பணம் என்பன யாழ்.நவீன சந்தை புடைவைக் கடை ஒன்றில் பேர்ஸுடன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் அல்லது அச்சுவேலி (பஸ்தரிப்பிடத் துக்கு முன்பாக) ராஜன் தேநீர்க் கடையில் ஒப்படைத்து உதவவும். (86659)

ஆறுகால்மடம், பழம் றோட்டைச் சேர்ந்த மகிழ்ராஜதுரை ஜீவமலர் என்பவருடைய விசே. அ.அட்டை (இல.0905003027), தேசிய அ.அட்டை (இல.615081507V), பெறுமதிமிக்க பொருள்கள் என்பன பேர்ஸுடன் பிடாரி கோயிலடி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86660)

194, காரைநகர் வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.கனகரத்தினம் இராசலட்சுமி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 413826159X), விசேட அ.அட்டை (இல. 0901017693) என்பன அளவெட்டிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (86662)

செல்வி **Dr.K.**செந்தில்மணிதேவி என்பவருடைய தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை திறப்புக் கோர்வை என்பன கஸ்தூரியார் வீதிக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து **41/2,** நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.(86676)

# கைதடி பஸ் கொடிகாமம் வரை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்ப்பாணம்,கண்டி வீதி ஊடான பஸ் சேவை புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

படையினரின் பாதுகாப்புடன் கைதடி வரை நடைபெற்ற இந்த முதல் நாள் பஸ் சேவையில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் கே.மணிபல்லவராஜன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், 52 ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் செனவீர ஆகியோரும் பயணம் செய்தனர்.

இந்த பஸ் சேவை நேற்று முதல கொடிகாமம் வரை விஸ்தரிக்கப்பட்டு இராணுவ பாதுகாப்புடன் நடைபெற்று வருகிறது.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து காலை 9.15 மணிக்கும், பிற்பகல் 3.30 மணிக்கும் புறப்படும் இந்தப் பஸ் கைதடி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் மட்டுமே நிறுத்தப்படும் இடைவழியில் பயணிகள் இறங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து பிற்பகல் 3.30 மணிக்கு புறப்படும் பஸ் கொடிகாமத்தில் இரவு தரித்து நின்று மறுநாள் மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(க-5)

# சந்தை வியாபாரிகள் மகஜர்

நெல்லியடி,ஏப்.16

பருத்தித்துறை மரக்கறிச் சந்தைக்குள் கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இதனால் வியாபாரிகளின் மரக்கறி வகைகள் நாசமாகின்றன.

இது குறித்து, இச் சந்தை வியாபாரிகள், 76 பேர் கையொப்பமிட்டு பருத்தித்துறை நகர சபைத் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (க-109)

# நோயாளருக்கு உடுபுடைவை அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

ஆன்மீக நாட்டமுள்ள இந்து இளைஞர்கள் அமைப்பினால் யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர் பலருக்கு புத்தாண்டு தினமன்று உடுபுடைவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

பராமரிக்க உதவியற்ற நோயாளருக்கும், வசதியற்ற நோயாளருக்குமே உடுபுடைவைகள் விநியோகிக்கப்பட்டன. (க-15)

# ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும், தொழிற்சங்கவாதியுமான அமரர் எச்.என்.பெர்னாண்டோ ஞாபகார்த்தமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இடையே கட்டுரை, சிறுகதை, குறுநாவல், சித்திரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக அந்தச் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இந்தப் போட்டி பற்றிய விவரங்களை கந்தர்மடம் அம்மன் வீதியில் உள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம் எனவும்-அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# ஆலய உற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களிடையேயான இப் போட்டிக்குரிய படிவங்களை ஆலயத்திலேயே பெற்றுக் கொள்ளலாம் என்று போட்டி அமைப்பாளர் அறிவித்துள்ளார். எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# தற்போது....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாளருக்கு இரகசியத் தபாலில் அனுப்பி உறுதி செய்து கொள்ளலாம். ஆனால் சமர்ப்பிப்பவரிடமே உறுதி செய்து வரும்படி கூறுதல் சட்டத்திற்கு முரணானதாகும்.

(3) தற்போது வழக்கில் உள்ள பிரதிகள்:-

(அ) பதிவாளரால் வழங்கப்படும் இலவசப் பிரதி.

(ஆ) பதிவாளரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் இலவசப் பிரதியொன்றின் போட்டோப் பிரதி.

(இ) பதிவாளரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் அவர் வசமுள்ள புத்தகத்தின் போட்டோப் பிரதி.

(ஈ) மேலதிக மாவட்டப் பதிவாளரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் போட்டோப் பிரதி அல்லது கையெழுத்துப் பிரதி.

(உ) உதவிப் பதிவாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் போட்டோப் பிரதி அல்லது கையெழுத்துப் பிரதி.

### காலம் கடந்த பிறப்புப் பதிவு செய்தல்

பிறப்பொன்று பதியப்படாமல் விடப்பட்டதை உணர்ந்து அதனைப் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் அதற்கென விதிக்கப்பட்ட படிவத்தைப் பூர்த்திசெய்து தமது பகுதி மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தோடு பின்வரும் ஆவணங்களையும் இணைத்தல் வேண்டும்.

(1) காலம் கடந்த பிறப்பை பதிவுசெய்வதற்கான பிரதிக்கினைப் படிவம்.

(2) பெற்றோரின் விவாகச்சான்று.

(3) பெற்றோரின் பிறப்புச் சான்றுகள்/அடையாளஅட்டை போட்டோப் பிரதி

(4) பெற்றோர் இறந்திருந்தால் இறப்புச் சான்று.

(5) இப்பிள்ளையுடன் கூடப் பிறந்த சகோதரர்கள் யாவரதும் பெயர், பிறந்த திகதி, பால் போன்ற விடயங்களைக் காட்டும் பிள்ளைகள் பட்டியல் ஒழுங்காக.

(6) இப்பிள்ளைக்கு நேர் மூத்த நேர் இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றுகள்.

(7) பிள்ளை பிறந்த திகதியையும், இடத்தையும் உறுதிப்படுத்தும் சான்று (வைத்தியசாலை அல்லது மருத்துவமாதுவின் கடிதம், தடுப்பூசி அட்டை, சாதகம், ஞானஸ்நானச் சான்று என்பவற்றில் பெறக் கூடியவற்றைப் பெற்று இணைத்தல் வேண்டும்)

(8) பாடசாலை செல்லும் பிள்ளையானால் பாடசாலை அதிபரின் கடிதம்.

(9) குடும்ப விவரத்தைக் காட்டும் கிராமசேவையாளரின் அறிக்கை.

(10) சம்பந்தப்பட்டவர் திருமணமானவராயின் விவாகச் சான்றும் பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புச் சான்றும்.

(11) ரூபா 40/- முத்திரை. (மேற்படி ஆவணங்களின் போட்டோப் பிரதிகளை உண்மைப் பிரதிகளுடன் சமர்ப்பித்து உண்மைப் பிரதிகளை உடனேயே மீளப் பெற்றுக்கொள்ளலாம்)

ஆவணங்கள் பெறப்பட்டதும் அவை பரிசீலிக்கப்பட்டு அவற்றின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படுவதற்காக விசாரணையும் நடைபெறும். சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் விசாரணையின் தன்மைகளும் மாறுபடும். அதனை இங்கு விவரித்தல் சட்டத்துக்கு முரணானதாகும்.

வெளிநாட்டில் பெற்றோர் இருப்பின், அல்லது பெற்றோரில் ஒருவர் இருப்பின் அல்லது பிள்ளை மட்டும் இருப்பின் அல்லது பிள்ளையும் பெற்றோரும் இருப்பின் எப்படி பதிவு செய்வது என்பது தொடர்பான ஆலோசனையை மேலதிக மாவட்டப் பதிவாளருடன் தொடர்பு கொண்டு அறியலாம்.

★

# வாசகர் திருமுகம்

## புங்குடுதீவுக்கு தனியான பஸ் சேவை இல்லாததால் அரச ஊழியர் சிரமம்

பாடசாலைகள், வைத்தியசாலைகள், உபபிரதேச செயலகங்கள், தபாலகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் பணியாற்றுபவர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்கள் என அறுபதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் புங்குடுதீவுக்குத் தினந்தோறும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று வருகின்றார்கள்.

இவர்கள் செல்வதற்கென்று விசேட பஸ் சேவையும் இல்லை. குறிகாட்டுவான் செல்லும் பஸ்ஸிலேயே செல்ல வேண்டியுள்ளது. அதில் நயினாதீவு, நெடுந்தீவுக்குப் பெருந்தொகையான மக்களுடன் மூடை, முடிச்சுகளும் ஏற்றப்படுகின்றன. இதில் பிரயாணம் செய்பவர்கள் பிரயாணிகள் என்ற நிலை மாறி பிராணிகளாகவே கணிக்கப்படுகின்றார்கள். இவ்வாறு செல்வதனால் அல்லைப்பிட்டி, மடத்துவெளி, வேலணைத் துறை ஆகிய கடற்படை முகாமில் பதிவதற்காகவும், சோதனை செய்வதற்காகவும், 'பாஸ்' எடுப்பதற்காகவும் நீண்ட நேரம் நிற்க வேண்டியுள்ளது. அதாவது அங்கு செல்வோர் போவதற்கும் வருவதற்கும் நான்கு மணி நேரத்தைச் செலவிடவேண்டியுள்ளது. இதனால் அரச ஊழியரின் கடமை நேரம் குறைவடைகின்றது.

இவ்வாறான சிரமங்களைக் குறைப்பதற்கும் அரச ஊழியர்கள் தமது கடமையைச் சீராகச் செய்வதற்கும் ஒரு விசேட பஸ் சேவையை நடத்துங்கள் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர், உயர் அதிகாரிகள், கட்சித் தலைவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினர்களிடம் கூறிய போதும் அவை அனைத்தும் "செவிடன் காதில் ஊதிய சங்கு" போலவே ஆகிவிட்டன.

இந்த நிலை கடந்த ஐந்து, ஆறு வருடங்களாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இந்த நிலைத் தொடர்ந்து இருப்பது அவ்வூர் மக்களுக்குப் பேரிழப்பாகும். வேலணை - குறிகாட்டுவான் வீதியை புனரமைப்புச் செய்வதற்கு எவ்வாறு அங்கு வாழும் மக்கள் வீதியில் இறங்கி மறியல் போராட்டம் செய்து அதில் வெற்றி கண்டார்களோ; அதேபோன்று மாண வர்கள், பெற்றோர்கள், அவ்வூர் மக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் மீண்டும் ஒரு மறியல் போராட்டம் செய்யும் நிலையே தற்போது உருவாகியுள்ளது.

*யாழ்ப்பாணம்* **பாதிக்கப்பட்ட அரச ஊழியர்.**

## விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க மக்கள் படும் அவலம்

யாழ். குடாநாட்டு மக்கள் உயிருக்கு மேலாக மதிப்பதும் பேணுவதுமான பொருள் அடையாள அட்டையாகும். வீட்டுப்படலையை விட்டுத்தாண்டியதும நாம் சோதித்துப் பார்க்க வேண்டியது "பொக்கட்டில்" பணம் உண்டா, "பேர்சில்" பணம் உண்டா, என்றல்ல. பொக்கட்டில், பேர்சில் அடையாள அட்டை உண்டா என்றேயாகும். தேசிய அடையாள அட்டை இல்லாமல் சில இடங்களுக்குப் போய்வந்தாலும், விசேட அடையாள அட்டை இல்லாமல் ஓரிடமும் போய்வரமுடியாது. இது குடாநாட்டு வாழ் தமிழ் மக்கள் அறிந்த உண்மை. ஏனெனில் இராணுவத்தினர் நம்பும் அடையாள அட்டையும் அதுவேயாகும்.

யாழ். குடாநாட்டுக்கு அரச அதிபர், பிரதேச செயலர்கள், அதைவிட தமிழ் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபைத் தலைவர்கள் என மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். குடாநாட்டில் இவர்கள் ஏதோ சாதித்துவிட்டதாகத் 'தம்பட்டம்' அடிக்கிறார்கள்.

இவர்களைவிட விசேட அடையாள அட்டைப் பிரிவுக்கு தனிப் பொறுப்பதிகாரியும் உள்ளார். ஆனால் தற்போது ஒருமாத காலமாக விசேட அடையாள அட்டை விண்ணப்பப்படிவம் யாழ். குடாநாட்டில் இல்லை. இது இவர்களுக்குத் தெரியவில்லையா? இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

விசேட அடையாள அட்டைப் பிரிவினிடம் கேட்டால் தம்மிடம் விணணப்பப் படிவம் இல்லை. போட்டோ பிரதி எடுத்து விண்ணப்பிக்கச் சொல்கிறார்கள். ஒரு பாடசாலையில் ஒவ்வொரு வருடமும் 10 வயதைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் 50 தொடக்கம் 100 வரை உள்ளனர். இவர்களுக்கு பாடசாலை ஆசிரியர்களே பாடசாலை ஊடாக விண்ணப்பித்து விசேட அடையாள அட்டை எடுத்துக் கொடுப்பது வழக்கம்.

குடாநாட்டில் எல்லாப் பாடசாலைகளும் வளமான வசதியான பாடசாலைகள் அல்ல. தரம்5 வரையுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பவர்களில் அனேகர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்வர்கள். இவர்கள் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிபதானால் விண்ணப்பப் படிவம் போட்டோப் பிரதி எடுப்பதற்கு ஒரு விண்ணப்பப்படிவத்துக்கு (இரு பக்கங்களும்) 14 ரூபாவரை செலவாகிறது. சிறிய பாடசாலைகள் இந்த நிதி நிலைமையைச் சமாளிக்க முடியாது.

எனவே மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிககாது விடவேண்டிய கட்டாய நிலமைக்கு ஆசிரியர்கள் தள்ளப்படுகின்றனர். இதனால் கிராமப்புற மாணவர் 5ஆம் வகுப்பை முடித்து பாசாலைக் கல்வியை விட்டபின்னர் பல இன்னோரன்ன இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மேலும் இதனைவிட கிராம அலுவலர்களிடம் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கச் சென்றால் விண்ணப்பப்படிவம் இல்லை போட்டோப் பிரதியைக் கொண்டு வந்தால் விண்ணப்பிக்க முடியும் என்கிறார்கள். இதனால் மக்களுக்கு வீண் அவலங்களும் அலைச்சல்களும் ஏற்படுகின்றன.

எமது மக்களின் நன்மை கருதி மக்களுக்காகச் சேவை செய்யும் உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுப்பார்களா?

**சண்டிலிப்பாய்** **சங்கர்-**

## சேவை நலன் பாராட்டு

யாழ். கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையில் பதினொரு வருட காலம் அதிபராகப் பணிபுரிந்து கடந்த (12.04.2001) வியாழக்கிழமை முதலாக ஓய்வுபெற்ற

**உயர்திரு.எஸ்.தங்கராஜா**

அவர்களைக் கௌரவிப்பதுடன், தரம் II இல் அதிபராகப் பதவி உயர்வு பெற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்,
நலன்விரும்பிகள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

*கற்கோவளம்.*
(86682)

## வெளிநோயாளர் பிரிவுக்கு கொட்டகை வசதி

யாழ்.போதனா வைத்தியசாலையில், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் ஒதுங்கி நிற்க வசதியாக தனியார் நிறுவனம் ஒன்று கொட்டகை ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் 'புரோ மோட்டோர்ஸ்' நிறுவனத்தினரே நோயாளருக்காக தகரக் கொட்டகை ஒன்றை அன்பளிப்பாக அமைத்துக் கொடுத்துள்ளனர்.

ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் இக் கொட்டகை சுமார் 30 அடி நீளம், 20 அடி அகலம் கொண்டதாகும்.

நேற்று முதல் இந்தக் கொட்டகை நோயாளரின் பாவனைக்கு நிர்வாகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நோயாளர்கள் கடும் வெயிலிலும், மழையிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் என்பது தெரிந்ததே. (க-15-6)

## திருட்டு

சுன்னாகம்,ஏப்.16

கடையைத் திறந்த பின்னர் பின்புறம் தண்ணீர் எடுக்க உரிமையாளர் சென்றவேளை மேசை 'லாச்சிக்'குள் இருந்த 4ஆயிரத்து 650 ரூபா பணம் திருடப்பட்ட சம்பவம் சுன்னாகத்தில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

பணத்துடன் கடைக்காரரின் அடையாள அட்டைகளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# புத்தாண்டு தமிழருக்கு வெற்றிகளைக் குவிக்கட்டும்!

## விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.16

பிறந்துள்ள புத்தாண்டு தமிழர்களுக்கு வெற்றிகளை அள்ளிக் குவிக்கட்டும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புத்தாண்டே வருக! தமிழர் சிந்தையெல்லாம் மகிழ வருக! புனிதமான உனது வருகையில் தமிழர் கைவிலங்கு உடையட்டும். தடையெல்லாம் அகலட்டும் அன்னையர் குலம் சிந்துகின்ற கண்ணீர் நீங்கட்டும்.

பிறக்கின்ற புத்தாண்டே! எம்மவர்க்குச் சீரெல்லாம் அள்ளித் தருகின்ற ஆண்டாக வெற்றிதனைக் குவிக்கின்ற ஆண்டாக - நீ மலரவேண்டும். சுதந்திர வாழ்வு காண உழைக்கின்ற தமிழருக்கு உதவுகின்ற ஆண்டாக நீ விளங்க வேண்டும் - என்று மனதார வாழ்த்தி வணங்கி வரவேற்கின்றேன் - என்று தனது செய்தியில் விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்துள்ளார். (ஐ)

# எங்கும் மங்கலம் தங்கட்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.16

மலர்ந்துள்ள சித்திரைப் புத்தாண்டை ஒட்டி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.மாவட்ட இணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சித்திரைப்புத்தாண்டு பிறந்துள்ளது. புதிய நம்பிக்கைகளும் துளிர்விட்டுள்ளன. சமாதானம் என்ற அரும்பு மலரும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது. அமைதியும் நிம்மதியும் கூடிய வாழ்வு இம்மண்ணில் சாத்தியமாகும் என்னும் செய்தி பரவலாக எல்லோரது செவிகளுக்கும் எட்டியுள்ளது. இந்த தருணத்தில் புத்தாண்டை குதூகலிப்பதில் ஈடுபட்டிருக்கும் அனைவரோடும் எனது புத்தாண்டு மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

இதேவேளை கடந்த கால உயிர், உடைமை இழப்புகளால் நொந்து போயும் போர்ச்சூழல் விளைவித்த காயங்களால் துவண்டு போயும் உள்ள எமது மண்ணில் வாழும் ஒவ்வொருவரதும் கண்ணீர் துடைக்கப்படவேண்டும். அழுகைக்குரல்கள் நிறுத்தப்படவேண்டும். என்ன போன்ற ஆதங்கம் எமக்கு அதிகமாகவே உள்ளன. அவ்வகையில் அமைதியும் இயல்பு நிலையும் நீடிக்க வேண்டும் என்பதுவே முதற்படியாகும். இதனைத் தொடர்ந்து அனைவரும் ஒத்த கருத்துடன் கலந்துரையாடி இணக்கத் தீர்வு காண்பதும் தேவையானதாக இருக்கும்.

மலர்ந்துள்ள புத்தாண்டு இந்தப் பாதையில் பயணிப்பதற்கான வழியைக் காட்டட்டும். இதற்குத் தேவையான திடசித்தத்தையும், மனஉறுதியையும் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்புக்கும் ஊட்டட்டும். பொங்கும் மங்களம் எங்கும் தங்கிடவும் புதுப்பொலிவும் எழில்மெருகும் எம்மண்ணில்பெருகவும் வேண்டுமென்ற ஆவலை வெளிப்படுத்தி புத்தாண்டை வரவேற்போமாக! (ஐ)

## சமாதானம் மலரட்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.16

நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளருமான க.மணி பல்லவராஜன் (நிஷாந்தன்) விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தி வருமாறு:-

இனிய விஷு வருடம் இப்போது பிறந்துள்ளது. முன்னைய காலங்களில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு போர்த்தேங்காய் அடிப்பது, மாட்டுவண்டில் சவாரி போன்ற நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடத்தப்பட்டு வந்ததைச் செய்திகளாகவே நாம் அறிந்துள்ளோம். எனினும் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் நீடித்து வரும் கோரயுத்தம் ஏற்படுத்தியுள்ள காயங்களே அதிகம். எமது மக்களின் மத்தியில் போர் சுமத்தியுள்ள காயங்கள் சுமக்காத எவருமே இல்லையென்று சொல்லலாம். இழப்புக்களைச் சந்திக்காத எவரும் இல்லையென்றே சொல்லலாம். எனவே இத்தகைய நிலைமைகள் இனியும் தொடரக்கூடாது என்ற ஆவலை வெளிப்படுத்தும் மக்களுள் ஒருவராக இருக்கின்றோம்.

மலர்ந்துள்ள புத்தாண்டு இந்த மண்ணில் அமைதியும் சமாதானமும் நிலவ வழிகாட்டும் ஒவ்வொருவருக்கும் பக்கத்துணையாக இருக்கட்டும். சமாதானத்தை நிலைநாட்டி கௌரவமான வாழ்வு ஒவ்வொருவருக்கும் சாத்தியமாக இப் புத்தாண்டில் தெளிந்த பாதையில் பயணம் தொடரட்டும். (ஐ)


# ST.JOHN'S COLLEGE JAFFNA

## OLD BOYS' ASSOCIATION

### வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

சங்கத்தின் 87ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 21.04.2001 சனிக்கிழமை கல்லூரியில் Peto Memorial மண்டபத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர்களை துணைவியர் சகிதம் அழைக்கின்றோம்.

**Programme for the day**

| | | |
|---|---|---|
| 7.30 a.m. | - | Holy Communion Service |
| 8.45 a.m. | - | Fellowship Breakfast |
| 9.30 a.m. | - | Annual General Meeting |

**Agenda**

1. Prayer
2. Vote of Condotence
3. Minutes of the last AGM
4. Principal's Review
5. Annual Report
6. Statement of Accounts
7. Election of Office Bearers

| | | |
|---|---|---|
| 10.30 a.m. | - | Cricket Match- Old Boys Vs Present Boys |
| 1.30 p.m. | - | Fellowship Lunch |
| 2.00 p.m. | - | Cricket Match (Continued) |
| 4.00 p.m. | - | Principal's Tea |
| 4.30 p.m. | - | Football Match- Old Boys Vs Present Boys |

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 20.04.2001 ஆம் திகதிக்கு முன்னதாக **காலைப் போசனம் 30/=, மதிய போசனம்** 70/=வை கல்லூரியில் செலுத்துமாறு வேண்டுகிறோம்.

**தபால் அழைப்பு இல்லாததால் சகல அங்கத்தவர்களும் இதனை அழைப்பாக ஏற்று சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

(C/16327)

**S.THANAPALAN** (PRINCIPAL) **K.KESAVAN** (PRESIDENT) **A.J.KADIRGAMAR** (HONY.SECRETARY)



# வாழ்த்துகின்றோம் - வரவேற்கின்றோம்

முன்னாள் செயலாற்று முகாமையாளரை வாழ்த்துகின்றோம். எம் (மக்களின்) சேவைகளுக்காக



புதிய பொது முகாமையாளரை வரவேற்கின்றோம். எம் (மக்களின்) தேவைகளுக்காக

(86692)

# சு.மணிவாசகன்

(சமாதான நீதிவான், முன்னாள் செயலாற்று முகாமையாளர் - வ.பி.போ.சபை)

நலன் விரும்பிகள், ஊழியர்கள், வ.பி.போ.சபை, கோண்டாவில் சாலை.


## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் திருமந்திரம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ.அருந்தவநாதன் வழங்குவார். (ஐ-173)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 24 - 09 - 1927



மறைவு 17 - 03 - 2001

## திருமதி வடிவேலு புஸ்பராணி

*அன்பிற்கினிய தாயே! எமதருமைத் தெய்வமே!*
*நெஞ்சுருகி ஏங்குகின்றோம் உந்தன் நினைவாலே*
*உனதாத்மா சாந்திக்கே இறை அஞ்சுகிறோம் அம்மா!*
*அமைதி பெறவென்றே இறைவனிடம் சேர்ந்தாயே!*

இன்று (16.04.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு.* (86691)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை கந்தசாமி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கந்தசாமி (பட்டு) 12.04.2001 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் வசந்தாதேவியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும் டயானா, நித்தியா (இராமநாதன் கல்லூரி பெண்கள் உயர் பாடசாலை, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்லத்துரை-அருளம்மாவின் மருமகனும் மற்றும் இராஜதுரை, செல்வராசா, காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் இராஜமணி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரபாலன் (H.N.B. Colombo- இளைப்பாறிய உத்தியோகத்தர்), திருமதி ச.பிறேமா (பாத்திமா முஸ்லிம் பெண்கள் பாடசாலை, கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:- *திருமதி யதீஸ்வரன் ராஜமணி, கட்டு விளாணை, ஏழாலை மேற்கு, ஏழாலை.* (86686)

தகவல்: **V.S.இரத்தினம்,** *முத்தட்டுமட லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

## சின்னத்தம்பி கண்மணி

திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கண்மணி சனிக்கிழமை இரவு (14.04.2001) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.S.இராசா தம்பதிகளின் அன்பு மகளும், சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் விஜயகாந்தன், சத்தியதேவி, சாந்தினிதேவி, (ஜேர்மனி), நிர்மலாதேவி (இந்தியா), காலஞ்சென்ற கலாயினிதேவி சந்திரகாந்தன் (கண்ணன்-கனடா), ஆறுமுகதாஸ் (ரஞ்சன்-பிரான்ஸ்), கலைச்செல்வி ஆகியோரின் தாயாரும், தையலம்மா (இராசாத்தி), ஞானமணி (இருபாலை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

*493/48, கோயில் வீதி, நல்லூர்.* (86690)

தகவல்: **சி.விஜயகாந்தன்** (மகன்)

## நன்னியர் முருகர்

அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியர் முருகர் நேற்று (15.04.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அழகரத்தினம் (நில அளவைப் படவரைஞர்), அப்புத்துரை, நாகம்மா, குணரத்தினம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் இந்திராணி, செல்வரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஷ்பராணி, ருக்மணி, காலஞ்சென்ற குருசாமி மற்றும் சிவக்கொழுந்து (பிரான்ஸ்), ஜே.பி.குணரத்தினம் (பொதுமுகாமையாளர்), பாலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், பிரதீபன் (கனடா), பார்த்தீபன், பிரமிளா, பிரகலாதன் (பேராதனைப் பல்கலைக்கழகம், விஞ்ஞான பீடம்), பிரஷாந்தன் (பிரான்ஸ்), அனுராகன், பிரஷாந்தி, சுஜீவா (கணக்காளர்), சஜந்தன் (பிரான்ஸ்), அனோஜா, அர்ச்சனா, அனோசன், திசான் (பிரான்ஸ்), நிகேதா (பிரான்ஸ்), மெலானி (பிரான்ஸ்), ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.04.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தம்மலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'வசந்தம்', அளவெட்டி மேற்கு, அளவெட்டி.* (86689)

தகவல்: **ஜே.பி.குணரத்தினம்** (பொதுமுகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்)

# பேச்சுக்கான இறுதி ஏற்பாடுகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை

## அமைச்சர் ஜயரத்தின தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.16

அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. பேச்சுக்கான இறுதி ஏற்பாடுகள் இன்னமும் பூர்ததியாகவில்லை.

விவசாய அமைச்சரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி.எம்.ஜயரத்தின இவ்வாறு தெரிவித்தார்.

பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவதற்கான நடவடிக்கைகளை நோர்வே மேற்கொண்டு வருகிறது. இதற்கான உதவிகளை அரசு நோர்வேக்கு வழங்கிவருகிறது.

இந்த நடவடிக்கைகள் இன்னமும் இறுதிக் கட்டத்தை அடையவில்லை. பேச்சுத் தொடர்பான விடயங்களை இறுதிக்கட்டத்திலேயே எதிர்க்கட்சிகளுக்குத் தெரியப்படுததுவோம்.

இன்றுள்ள நிலையில் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது தொடர்பான விவரங்கள் வெளியிடப்படும் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

# சுதந்திர ஆணைக்குழுக்களை உடனே நிறுவக் கோருகிறது ஆயர் பேரவை

கொழும்பு,ஏப்.16

நாட்டில் ஜனநாயக சூழ்நிலை ஏற்பட வசதியாக சுதந்திரமான பொலீஸ், தேர்தல், பொதுச் சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்களை உடன் அமைக்க வேண்டும் என்று கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரியுள்ளது.

அந்தச் சபையின் தலைவர் அதிவண. ஒஸ்வால்ட் தோமஸ், செயலாளர் அதிவண. மல்கம் ரஞ்சித் ஆகியோர் அரசு மற்றும் எதிர்க்கட்சிகளிடம் பகிரங்கமாக இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் ஜனநாயகச் சூழல் நிலவ வேண்டுமானால் நான்கு சுதந்திரமான ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டுமென்று சகல தரப்புக்களில் இருந்தும் குரல் எழுப்பப்படுகிறது.

இந்த ஆணைக்குழுக்களை அமைப்பதன் மூலம் நியாயமான தேர்தல் இடம்பெறவும், ஏனைய சேவைகள் சுதந்திரமாக இயங்கவும் வாய்ப்புக்கிட்டும் என நம்புகின்றோம்.

இந்த விடயத்தில் அரசும் எதிர்க் கட்சிகளும் கூட்டாகச் சேர்ந்து இந்த ஆணைக்குழுக்களை விரைவில் அமைக்க வேண்டும். இதன் மூலம் ஜனநாயகச் சூழல் ஏற்படுவதுடன் சமாதானத்துக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# முஸ்லிம்களின் பிரச்சினை குறித்தும் பேச்சுக்களில் ஆராயப்பட வேண்டும்!

## ஜனாதிபதியிடம் பேரியல் அஷ்ரப் கோரிக்கை

கொழும்பு,ஏப்.16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நோர்வேயின் ஒத்துழைப்புடன் இடம்பெறும் பேச்சுக்களில் இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய வேண்டும் என்று கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவர் சந்தித்த சமயம் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் அரசு - புலிகள் பேச்சுக்களின் போது ஆராயப்பட வேண்டி உள்ளதாக ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். பேச்சுக்களில் எமது சார்பில் பிரதிநிதி ஒருவர் பங்கு பற்ற வேண்டுமா இல்லையா என்பது குறித்து ஜனாதிபதியே முடிவு செய்ய வேண்டுமென்றும் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார். (ஐ-3-9)

# கடலட்டை பிடித்தோரின் அடையாள அட்டைகள் பறிமுதல்

ஊர்காவற்றுறை,ஏப்.16

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்ட மீனவர்களின் அடையாள அட்டைகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த புதன்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மீனவர்களை கரைக்கு வருமாறு அழைத்த கடற்படையினர் அவர்களை தம்பாட்டியிலுள்ள தமது முகாமுக்கு அழைத்துச்சென்று விசாரணை மேற்கொண்ட பின்னர் அடையாள அட்டைகளைப் பறிமுதல் செய்ததாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாக இந்தக் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர். (ஐ-16-7)


## புதிய வீடியோ CD வெளியீடுகள்

* விஜய் நடித்த — ❖ பத்திரி
* ஜோதிகா நடித்த — ❖ லிட்டில் ஜான்
* ஜெயராம் நடித்த — ❖ இன்று முதல்
* ராம்கி, ரம்யாகிருஷ்ணன், வடிவேலு நடித்த — ❖ ராஜ ராஜேஸ்வரி
* மாதவன் நடித்த — ❖ டும் டும் டும்

பிரமிட் வெளியீடுகள்

❖ பிரியாத வரம் வேண்டும்
❖ நினைக்காத நேரமில்லை

மிலேனியம் ஓடியோ வீடியோ செண்டர்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.3646

திரையரங்குகளுக்கு முன்னுரிமை.

பிரதிகள் 1.30 இற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(86675)


## கரவெட்டியில் பரிசளிப்பு விழா

நெல்லியடி, ஏப்.16

கரவெட்டி மேற்கு செஞ்சுடர் விளையாட்டுக்கழக 25 ஆவது வருடாந்த விழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று மாலை 6மணிக்கு கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில் பொ.அருமைத்துரை தலைமையில் நடைபெறும்.

விழாவில் கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-109)

---

## தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை -

அரசமைப்பு விவகாரம் மற்றும் விஞ்ஞான அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும் நோர்வே நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார் என்றும் -

அங்கு அவர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் -

கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

(ஐ-3-4)


BRIGHTMAN

கல்வி நிலையம்

பிறவுண் வீதி, யாழ்நகர்.

A/L 2003

தமிழ்

N.பாலா

புதிய பிரிவு

ஆரம்பம்:- 17.04.2001 செவ்.9.30

(ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்)

O/L DAY CLASS

வகுப்புகள் நடைபெறுகின்றன.

(86661)




யாழ்.மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவு நடத்தும் 'இதழியல்' கற்கைநெறியைப் பின்பற்றுகின்ற மாணவர்குழு அண்மையில் 'உதயன்' அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்து, பத்திரிகை தயாரிப்புப் பணியைப் பார்வையிட்டு பத்திரிகை ஊழியர்களுடன் கலந்துரையாடியது. 'உதயன்' அலுவலகத்துக்கு வருகை தந்த அந்த மாணவர் குழுவை படத்தில் காணலாம்.

# சைக்கிள் ஓட்டப் போட்டியாளர் இருவர் விபத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஏப்.16

புத்தாண்டு நிகழ்வை ஒட்டி யாழ்ப்பாணம் 512ஆவது பிரிகேட் பிரிவினால் நேற்று நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் பங்குகொண்ட இருவர் விபத்தில் சிக்கி காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆண்களுக்கான 35மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குகொண்ட புத்தூர் கிழக்கைச்சேர்ந்த பரமு அமிர்தலிங்கம் (வயது 41) என்பவர் நவக்கிரிப் பகுதியில் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தார்.

மற்றொரு போட்டியாளரின் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெண்களுக்கான 20மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட நெடுந்தீவைச் சேர்ந்த யேசுதாஸன் றொஸானி(வயது18) என்பவர் இருபாலையில் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தார்.

எதிர்பாராத விதமாகக் குறுக்கே வந்த ஒருவரின் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(க-15)

## கல்வி ஊக்குவிப்பு போட்டி

காரைநகர்,ஏப்.16

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபை முன்பள்ளி மாணவர்களிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் இம்மாதத்துக்குரிய போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

வாரிவளவு நல்லியக்க சபை மண்டபத்தில் நடைபெறும் இநதப் போட்டிகளில் காரைநகரிலுள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற உள்ளனர். (ஐ-73)

# அதிகாலையில் வீடு புகுந்து மோ.சைக்கிள் அபகரிப்பு

தென்மராட்சி,ஏப்.16

அதிகாலை வேளையில் வீட்டினுள் நுழைந்த இரண்டு இளைஞர்கள் வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்திவிட்டு அங்கிருந்த மோட்டார் சைக்கிளைக் கடத்திச் சென்ற சம்பவம் கடந்த புதன்கிழமை அச்சுவேலியில் இடம்பெற்றது.

அச்சுவேலி வடக்கில் கிராம அலுவலர் ஒருவரின் மோட்டார் சைக்கிளே இளைஞர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

முதலில் அந்த இளைஞர்கள் கிராம அலுவலரிடம் 50ஆயிரம் ரூபா பணம் கேட்டதாகவும், பணம் இல்லை என்று கூறவே மேசையில் காணப்பட்ட திறப்பினை எடுத்து மோட்டார் சைக்கிளை இயக்கிக் கொண்டு அவர்கள் தப்பிச் சென்று விட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## சமாசம் அமைப்பு

காரைநகர்,ஏப்.16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் ஒன்றை அமைப்பதற்கான வைபவம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேந்திரா சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-73)

## கொடுப்பனவை பெறுமாறு அறிவுறுத்து

நவாலி,ஏப்.16

யுத்த அனர்த்தங்கள் காரணமாக தென்மராட்சி, பளை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருந்து இதுவரை இடம்பெயர்ந்தோருக்கான கொடுப்பனவை பெறாதவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு சங்கானையில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இது இவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பமாதலால் சம்பந்தப்பட்டவர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-100)


## சந்திக்குமாறு அறிவித்தல்

இல. 6, மா. வீதி, கரவெட்டியில் உள்ள முருகன் பான்ஸியின் உரிமையாளர் அ. செல்வகுமார் என்பவரை அடுத்த மே மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி கடையில் வந்து சந்திக்குமாறு அல்வாயிலுள்ள தர்மரட்ணம் தம்பதியினரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சிமிலிகுமார்
(அ.குமார்)

(86671)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.